

அமரர்

# தங்கரெத்தினம் இராசரெத்தினம்



அவர்களின் சிவப்பேறு குறித்த

# ஞாபகார்த்த வெளியீடு

29.08.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



# அமரர்

# தங்கரெத்தினம் இராசரெத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஏடு

29.08.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்புத் தெய்வத்தின் பொற்பாதங்களிற்கு

இந்நூல்

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் குலவிளக்காய் நிழல் தரு பெருவிருட்சமாய் அன்பிலும் பண்பிலும் எம் அனைவரையும் வழிநடத்திச் சிறப்புற வாழ வைத்து இன்று வானுறையும் தெய்மாகி விட்ட எங்கள் குடும்பத்தலைவி அமரர் தங்கரெத்தினம் இராசரெத்தினம் அவர்கள் பற்றிய நெஞ்சத்து உணர்வுகளைத் தாங்கி நிற்கும் இம்மலரினை அன்னாரது பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
15.02.1949

மறைவு
30.07.2013

அமரர்

# தங்கரெத்தினம் இராசரெத்தினம்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

பாரேத்தும் விசயவருட ஆடித்திங்கள் ஈரேழில்
சீரேந்தும் அட்டமியாம் திதியதனில் – நேரிழையாள்
தங்கமான தங்கரத்தினம் மண்ணீற்றும் காமாட்சி – தன்
துங்கமுறு, கழலடைந்தாள் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்



திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

## தேவாரம்

சலம்பூ வொடு தூபம் மறந் தறியேன்
தமிழோ டிசை பாடல் மறந் தறியேன்
நலந் தீங்கிலும் உன்னை மறந் தறியேன்
உன்நாமம் என் நாவில் மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டு ழல்வாய்
உடலுள் ளுறு சூலை தவிர்த் தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏக நாயகனை யிமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னொடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்று
முண்டென வுணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

உலகெல்லா முணர்ந்து ஓதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி மேனியன்
அளகிற் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க
நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் மகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் வாழ்வியல் பதிவுகள்

*1949.02.15* செவ்வாய்கிழமை திருநெல்வேலி மண்ணில் சின்னத்துரை சிவக்கொழுந்து தம்பதியினரின் சிறப்பான இல்லறப் பயனாக இவ்வுலகிற்கு வந்த தங்கமே இத் தங்கரெத்தினம்.

இவர் தன் உடன்பிறப்புக்களான அண்ணனுடனும் இரு அக்காள்மாருடனும் தம்பியாக வந்த நடேசலிங்கத்துடனும் இன்புற்றிருந்தார். இளம்பராயத்திலேயே எல்லோருடைய அன்பைச் சம்பாதித்துக் கொண்டவர்

தன் ஆரம்ப கல்வியை யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தொடங்கினார். இவரிடம் இருந்த தனித்துவ ஆற்றலாலும் கல்வி மீதுள்ள ஆர்வத்தாலும் தனது உயர் கல்வியைத் தொடர்ந்து தனது கலைமாமணிப் பட்டப் படிப்பினைக் கொழும்பு பல்கலைக்கழகத்தில் முடித்து பிறருக்கு கல்வி புகட்டும் துறையான ஆசிரிய சேவையினை தெரிவு செய்து தனது பணியினை மன்னார் மாவிலங்கேணி பாடசாலையில் தொடங்கினார். தொண்டெனவே தனது ஆசிரியத் தொழிலையாற்றி வந்தார்.

அன்பின் உருவமாகிய தங்கா திருமணபந்தத்தின் மூலம் நாரந்தனையூரைச் சேர்ந்த கந்தையா இராசரெத்தினத்தை கரம்பிடித்து இல்லற வாழ்வில் இணைந்தார். இல்லற வாழ்வில் தனது உறவுகளுடன் உறவை நன்கு பேணி அனைவரையும் தன்பால் கவர்ந்து தமது வாழ்வில் பல அரிய காரியங்களை இறைவன் துணையுடன் முன்னின்று செய்தார்.

தனது கல்விச் சேவையை யா/கொக்குவில் இராமகிருஸ்ணா மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தார். தனது அயராத உழைப்பின் விளைவாக பல நல்ல மாணவச் செல்வங்களை உருவாக்குவதிலும் அவர்களுக்கான அடிப்படைப் பொருளாதார வசதிகளை ஏற்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதிலும் உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும் ஓர் ஆசிரியராக மட்டுமன்றி நல்ல தாயாகவும் இருந்துள்ளார். தன் சக ஆசிரியர்களினதும் அதிபரினதும் நன்மதிப்பையும் பெற்று சிறந்த ஆலோசகராகவும் கல்லூரியின் உப அதிபராகவும் இருந்து ஒரே கல்விச் சாலையில் 25 வருட சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் தனது 65 ஆவது வயதில் 30.07.2013 அன்று இறைபதம் எய்தினார். இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

## கடவுள் வாழ்த்து

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே**

ஆத்திப் பூமாலையை அணிந்துள்ள சிவபெருமானின் பிரியத்துக்கு உரிய விநாயகப் பெருமானை எப்பொழுதும் வழிபட்டு நாம் வணங்குவோம்.

**அறஞ் செய விரும்பு** **01**

நற்காரியங்களைச் செய்வதற்கு ஆசைப்பட வேண்டும்

**ஆறுவது சினம்** **02**

கோபத்தைத் தணியச் செய்ய வேண்டும்

**இயல்வது கரவேல்** **03**

இயன்றதை ஒளிக்காமல் செய்ய வேண்டும்

**ஈவது விலக்கேல்** **04**

பிறருக்கு உதவி செய்வதைத் தடுக்கக்கூடாது

**உடையது விளம்பேல்** **05**

உன்னிடம் இருக்கும் நன்மை தீமைகளைப் பிறரிடம் கூறாதே

**ஊக்கமது கைவிடேல்** **06**

செயலில் ஈடுபடும் பொழுது தடங்கல் ஏற்படுமானால் அதைக் கண்டு தைரியத்தை கைவிடக்கூடாது

**எண் எழுத்து இகழேல்** **07**

கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்கக்கூடாது

**ஏற்பது இகழ்ச்சி** **08**

பிறரிடம் போய் யாசிப்பது இழிவாகும்

**ஐயம் இட்டு உண்** **09**

பிச்சை கேட்பவர்க்கு உணவு கொடுத்த பின்னர் சாப்பிட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒப்புரவு ஒழுகு** 10

உலக அனுபவத்தை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்

**ஓதுவது ஒழியேல்** 11

படிப்பதை விட்டுவிடக்கூடாது

**ஔவியம் பேசேல்** 12

பொறாமைக் குணத்தோடு சொல்லக்கூடாது

**அஃகஞ் சுருக்கேல்** 13

தானியங்களை எடை அளவு குறைத்து நிறுக்கக்கூடாது

**கண்டு ஒன்று சொல்லேல்** 14

கண்ணால் பார்த்ததைத் தவிர வேறு எதையும் கூறாதே

**ஙப் போல் வளை** 15

"ங" என்ற எழுத்தைப் போல் அனைவருடனும் இணைந்து செல்ல வேண்டும்

**சனி நீராடு** 16

சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாயாக

**ஞயம்பட உரை** 17

கனிவான முறையில் எதையும் கூறுவாயாக

**இடம்பட வீடு எடேல்** 18

தேவைக்கு அதிகமாக வீட்டைப் பெரிதாக அமைக்காதே

**இணக்கம் அறிந்து இணங்கு** 19

நட்பு கொள்ளமுன் அவர் நல்லவரா என்பதைத் தீர அறிந்து அதன் பிறகு தொடர்பு கொள்ள வேண்டும்

**தந்தை தாய் பேண்** 20

பெற்றோரைப் போற்றி ஆதரிக்க வேண்டும்

**நன்றி மறவேல்** 21

ஒருவருக்கு செய்த உதவியை மறந்துவிடக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பருவத்தே பயிர் செய்** 22

உரிய காலத்திலே உழுது பயிரிட முற்படவேண்டும்

**மண் பறித்து உண்ணேல்** 23

மற்றவருடைய நிலத்தை அபகரித்து அதை உண்டு வாழக்கூடாது

**இயல்பு அலாதன செயேல்** 24

வழக்கத்துக்கு மாறான காரியத்தை செய்யக்கூடாது

**அரவம் ஆடேல்** 25

பாம்போடு விளையாடினால் ஆபத்து நேரிடும்

**இலவம் பஞ்சில் துயில்** 26

இலவம் பஞ்சு மெத்தையில் படுத்து நித்திரை செய்வது நன்மை தரும்

**வஞ்சகம் பேசேல்** 27

கபடமாகப் பேசக்கூடாது

**அழகு அலாதன செயேல்** 28

பிறர் இகழத்தக்கவற்றை செய்யக்கூடாது

**இளமையில் கல்** 29

சிறுபிராயத்திலே கல்வியைக் கற்பது சிறப்பாகும்

**அரனை மறவேல்** 30

இறைவனை மறவாமல் துதித்து வணங்க வேண்டும்

**அனந்தல் ஆடேல்** 31

கடலில் நீந்தி விளையாடினால் ஆபத்து நேரிடும்

**கடிவது மற** 32

பிறருக்கு கோபம் உண்டாக்கக்கூடிய சொற்களை கூறக்கூடாது

**காப்பது விரதம்** 33

பிற உயிர்களுக்கு ஆபத்து நேரிடாமல் காப்பது நோன்பு ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழமைப்பட வாழ்** 34

தனக்கே அன்றி மற்றவர்களுக்கும் உதவியாக வாழ வேண்டும்

**கீழ்மை அகற்று** 35

கீழ்த்தரமான செய்கையை செய்யாமல் நீக்கி விட வேண்டும்

**குணமது கைவிடேல்** 36

நற்பண்புகளை கைவிடாமல் வாழ வேண்டும்

**கூடிப் பிரியேல்** 37

நற்பண்புடையவர்களோடு தொடர்பு கொண்டு பிறகு அவர்களை விட்டுப் பிரியக்கூடாது

**கெடுப்பது ஒழி** 38

ஒருவருக்கும் தீங்கு செய்யக்கூடாது

**கேள்வி முயல்** 39

அறிவாளிகள் சொற்களை ஆவலோடு கேட்டுத் தெரிந்துகொள்

**கைவினை கரவேல்** 40

கற்ற கைத்தொழில்களை மற்றவருக்கும் கற்றுக்கொடு

**கொள்ளை விரும்பேல்** 41

ஒருவருடைய பொருளை கொள்ளை அடிக்க ஆசைப்படாதே

**கோதாட்டு ஒழி** 42

ஆபத்தை உண்டாக்கக்கூடிய விளையாட்டுக்களில் ஈடுபடாதே

**சக்கர நெறி நில்** 43

அரசு ஆணைகளை மதித்து நடக்கவேண்டும்

**சான்றோர் இனத்திரு** 44

அறிஞர்களின் குழுவிலே சேர்ந்து இருப்பது மேன்மை அளிக்கும்

**சித்திரம் பேசேல்** 45

பொய்யை அலங்காரமாக உண்மை போல பேசக்கூடாது

**சீர்மை மறவேல்** 46

சிறப்பான செயல்களை மறந்து விடவேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுளிக்கச் சொல்லேல்** 47

மற்றவர் முகம் கோணும்படியான சொற்களைக் கூறக்கூடாது

**சூது விரும்பேல்** 48

சூதாட்டங்களினால் பொருள் நஷ்டமும் மனக்கஷ்டமும் உண்டாகும்

**செய்வன திருந்தச் செய்** 49

செய்யும் காரியங்களைச் செவ்வையாகக் செய்ய வேண்டும்

**சேரிடம் அறிந்து சேர்** 50

சேரத்தக்கவர்களை நன்கு அறிந்து சேரவேண்டும்

**சை எனத் திரியேல்** 51

மற்றவர் இகழும்படி நடந்து கொள்ளக்கூடாது

**சொல் சோர்வு படேல்** 52

மற்றவருடன் பேசும்பொழுது மனம் தளர்ந்து பேசக்கூடாது

**சோம்பித் திரியேல்** 53

முயற்சி இன்றி சோம்பேறித்தனமாக ஊர் சுற்றக்கூடாது

**தக்கோன் எனத் திரி** 54

கௌரவமானவன் என்று பிறர் கருதும்படி நடக்கவேண்டும்

**தானமது விரும்பு** 55

ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்ய ஆசை கொள்ள வேண்டும்

**திருமாலுக்கு அடிமை செய்** 56

மகாவிஷ்ணுவுக்கு சேவை செய்தால் புண்ணியம் கிடைக்கும்

**தீவினை அகற்று** 57

பிறருக்குத் தீமை உண்டாகும் செயல்களைச் செய்யக்கூடாது

**துன்பத்திற்கு இடம்கொடேல்** 58

மனம் வருந்தும்படி நடந்து கொள்ளக்கூடாது

**தூக்கி வினைசெய்** 59

எந்தக் காரியத்தையும் நன்கு ஆராய்ந்து தெளிந்து செய்ய வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெய்வம் இகழேல்** 60

கடவுளை இகழ்ச்சியாகப் பேசக்கூடாது

**தேசத்தோடு ஒத்துவாழ்** 61

தன் நாட்டு மக்களோடு ஒற்றுமையாக இணைந்து வாழவேண்டும்

**தையல் சொல் கேளேல்** 62

மனைவியின் இழிந்த சொற்களைக் கேட்டு அதன்படி நடக்கக்கூடாது

**தொண்மை மறவேல்** 63

பழமையான காரியங்களை மறந்துவிடக்கூடாது

**தோற்பன தொடரேல்** 64

தோல்வி உண்டாகும் எனத் தெரிந்தும் அதில் ஈடுபடக்கூடாது

**நன்மை கடைப்பிடி** 65

நற்காரியங்களை உறுதியாகச் செய்து வரவேண்டும்

**நாடு ஒப்பன செய்** 66

நாட்டு மக்கள் ஒப்புக் கொள்ளத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டும்

**நிலையில் பிரியேல்** 67

மதிப்போடு இருந்துவிட்டு கேவலமாக நடந்து கொள்ளக்கூடாது

**நீர் விளையாடேல்** 68

ஆபத்தான வெள்ளத்தில் நீந்தி விளையாடக்கூடாது

**நுண்மை நுகரேல்** 69

நோயை தரக்கூடிய ஆகாரங்களை உண்ணக்கூடாது

**நூல் பல கல்** 70

அறிவு வளர்ச்சிக்கான நூல்களை அதிகமாகப் படிக்க வேண்டும்

**நெல் பயிர் விளை** 71

நெல் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும்

**நேர்பட ஒழுகு** 72

நேர்மையான வழியில் நடந்துகொள்ள வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நைவினை நணுகேல்** 73

இகழ்ச்சியான காரியங்களைச் செய்யக்கூடாது

**நொய்ய உரையேல்** 74

பிறர் மனம் புண்படும் படியான வார்த்தைகளை கூற வேண்டாம்

**நோய்க்கு இடம் கொடேல்** 75

நோய் உடலில் அணுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

**பழிப்பன பகரேல்** 76

பிறர் பழிக்கும் படியான இழிவான சொற்களைக் கூறவேண்டாம்

**பாம்பொடு பழகேல்** 77

பாம்பொடு விளையாடுவது உயிருக்கு ஆபத்து

**பிழைபடச் சொல்லேல்** 78

தவறான கருத்து ஏற்படும் சொற்களைச் சொல்ல வேண்டாம்

**பீடு பெற நில்** 79

பெருமைப் படத்தக்க முறையில் நடந்து கொள்ள வேண்டும்

**புகழ்ந்தாரைப் போற்றி வாழ்** 80

புகழ் மிக்க பெரியவர்களை வணங்கி, அவர்களைப் பின்பற்றி வாழ வேண்டும்

**பூமி திருத்தி உண்** 81

நிலத்தில் பயிர்செய்து, விளைந்த நெல்லைக் கொண்டு உண்ண வேண்டும்

**பெரியாரைத் துணைக்கொள்** 82

அறிவு மிகுந்த ஒழுக்க சீலர்களை அணுகி, அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும்

**பேதைமை அகற்று** 83

மூடத்தனமாக நடந்து கொள்ளக் கூடாது

**பையலோடு இணங்கேல்** 84

அறிவற்ற சிறுவனோடு பழகக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருள்தனைப் போற்றி வாழ்** 85

பொருள்களையும் செல்வத்தையும் கவனமாகப் பாதுகாத்து வைத்துக் கொண்டு வாழ வேண்டும்

**போர்த் தொழில் புரியேல்** 86

வீணாகச் சண்டை சச்சரவுகளில் தலையிடவேண்டாம்

**மனம் தடுமாறேல்** 87

மனங் கலங்கி செய்வது அறியாது தடுமாறவேண்டாம்

**மாற்றானுக்கு இடம்கொடேல்** 88

எதிரிக்குச் சிறிதளவேனும் இடம் அளிக்கக்கூடாது

**மிகைபடச் சொல்லேல்** 89

அளவுக்கு மீறிய சொற்களைச் சொல்லக்கூடாது

**மீதூண் விரும்பேல்** 90

அளவுக்கு அதிகமான உணவை உண்ண வேண்டாம்

**முனைமுகத்து நில்லேல்** 91

போர் முனையில் ஆயுதம் இல்லாமல் நிற்கக்கூடாது

**மூர்க்கரோடு இணங்கேல்** 92

அறிவு இல்லாத மூடர்களோடு சேரக்கூடாது

**மெல்லி நல்லாள் தோள்சேர்** 93

வீட்டிலே நல்ல மனைவியோடு இணைந்து வாழ வேண்டும்

**மேன்மக்கள் சொல் கேள்** 94

உயர் குணமிக்க பெரியோர்களின் அறிவுரையைக் கேட்டு நடந்தால் நன்மை உண்டாகும்

**மை விழியார் மனை அகல்** 95

மயக்கும் விலைமாதர் வீட்டுக்குப் போக வேண்டாம்

**மொழிவது அறமொழி** 96

சொல்லக்கூடியதை சந்தேகமின்றித் தெளிவாகக் கூற வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மோகத்தை முனி** 97

ஆசையை வெறுத்து அடக்கவேண்டும்

**வல்லமை பேசேல்** 98

உன்னுடைய திறமையை நீயே புகழ்ந்து கொள்ளக்கூடாது

**வாது முற்கூறேல்** 99

வலியச் சென்று யாரையும் விவாதங்களுக்குக் கூப்பிடக்கூடாது

**வித்தை விரும்பு** 100

கல்வி முதலான கலைகளை ஆசையோடு கற்றுக் கொள்ள வேண்டும்

**வீடு பெற நில்** 101

முக்திக்கான வழியை அடைய முயற்சி செய்ய வேண்டும்

**உத்தமனாய் இரு** 102

நற்குணம் உள்ளவனாக வாழ வேண்டும்

**ஊருடன் கூடிவாழ்** 103

ஊர்மக்களோடு ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும்

**வெட்டெனப் பேசேல்** 104

யாரிடமும் கடுமையான சொற்களைக் கூறக்கூடாது

**வேண்டி வினை செயேல்** 105

வேண்டும் என்றே எவருக்கும் தீமை செய்யக்கூடாது

**வைகறைத் துயில் எழு** 106

அதிகாலையில். விழித்து எழுவது சிறப்புடையதாகும்

**ஒன்னாரைத் தேறேல்** 107

எதிரிகளிடம் நம்பிக்கை கொள்ளக்கூடாது

**ஓரம் சொல்லேல்** 108

ஒருதலைப் பட்சமாகக் கூறக்கூடாது

*ஆத்திசூடி முற்றும்*

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

## கடவுள் வாழ்த்து

**கொன்றை வேந்தன் செல்வன் அடியினை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே**

கொன்றைப் பூவை அணிந்துள்ள சிவபெருமானுடைய செல்வப் புத்திரனான விநாயகப் பெருமானை எப்பொழுதும் துதித்துப் போற்றி வணங்குவோம்

## நூல்

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்** 01

அம்மாவும் அப்பாவும் கண்கண்ட கடவுள்

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று** 02

கோவிலுக்கு போய் இறைவனை வணங்குவது மிகவும் நன்மை தரும்

**இல் அறம் அல்லது நல் அறம் அன்று** 03

மனைவியோடு சேர்ந்து வாழ்வது நல்வாழ்வு இல்லாவிடில் நல்வாழ்வு ஆகாது

**ஈயார் தேட்டை தீயார் கொள்வர்** 04

எவருக்கும் உதவாத கருமிகளின் பொருள்களை தீயவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு போய்விடுவார்கள்

**உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு** 05

குறைவாக உண்ணுதல் பெண்களுக்குக் கவர்ச்சியாயிருக்கும்

**ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்** 06

ஊரோடு விரோதித்துக் கொண்டால் குடும்பத்தோடு அழிந்து விடுவார்

**எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்** 07

கணக்கும் இலக்கியமும் கண்களைப் போல சிறப்பானவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏவா மக்கள் மூவா மருந்து** 08

சொல்லும் முன்பே குறிப்பை உணர்ந்து செய்யும் மக்கள் அமுதத்துக்கு இணையானவர்கள்

**ஐயம் புகினும் செய்வன செய்** 09

வறுமையால் பிச்சை எடுக்க நேர்ந்த போதிலும் செய்ய வேண்டிய நல்ல காரியத்தை செய்யாமல் விட்டு விடக் கூடாது

**ஒருவனைப் பற்றி ஒரகத்து இரு** 10

ஒருவனை கணவனாகத் தேர்ந்தெடுத்து ஒரு வீட்டிலேயே அவனுடன் வாழ வேண்டும்

**ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்** 11

வேதத்தைப் படிப்பதைக் காட்டிலும் பிராமணருக்கு மிகவும் சிறப்பை அளிப்பது ஒழுக்க மேம்பாடே ஆகும்

**ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு** 12

பொறாமை எண்ணத்தோடு பேசுவது செல்வத்தை அழித்துவிடும்

**அஃகமும் காசும் சிக்கெனத் தேடு** 13

சிக்கனமாக இருந்து தானியத்தையும் செல்வத்தையும் சம்பாதிக்க வேண்டும்

**கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை** 14

கணவன் சொன்ன சொல்லை தட்டாது நடப்பதே பெண்களுக்கு நிறை ஆகும்

**காவல் தானே பாவையர்க்கு அழகு** 15

ஒழுக்கத்தோடு தங்களைக் காத்துக் கொள்வதே பெண்களுக்கு உரிய சிறப்பாகும்

**கிட்டாதாயின் வெட்டென மற** 16

ஆசைப்பட்டது கிடைக்காவிடில் அதை உடனே மறந்து விடுவது சிறப்பு

**கீழோர் ஆயினும் தாழ உரை** 17

அடிமை வேலை செய்யக்கூடியவர்களானாலும் கூட அவர்களிடம் மரியாதையோடு பேசிப்பழகுவது நன்மை தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை** 18

குற்றம் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தால் சுற்றத்தார் என யாருமே இருக்கமாட்டார்

**கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்** 19

தன் கையில் மிக்க கூர்மையாக ஆயுதம் வைத்திருந்த போதிலும் கர்வத்தோடு வீரம் பேசக்கூடாது

**கெடுவது செய்யின் விடுவது கருமம்** 20

தீங்கு செய்தவருக்குப் பதிலுக்குத் தீங்கு செய்யாமல் மன்னித்து விடுவது சிறந்த செயலாகும்

**கேட்டில் உறுதி கூட்டும் உடைமை** 21

வறுமையில் வாடினாலும் கூட மனம் தளராமல் இருப்பதே செல்வத்தைச் சேர்ப்பிக்கும்

**கைப் பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி** 22

கைவசம் இருக்கும் செல்வத்தைக் காட்டிலும் கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வமாகும்

**கொற்றவன் அறிதல் உற்ற இடத்து உதவி** 23

மக்களுக்கு ஆபத்து உண்டானபோது அதை உடனே அறிந்து தகுந்த உதவி செய்வதே ஆட்சி செய்வோர் கடமை ஆகும்

**கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு** 24

கோள் கூறுவதை விரும்பிக் கேட்பவர் காதிலே மேலும் கோள் மூட்டிவிட்டால் காற்றும் நெருப்பும் பற்றி எரிவது போலாகும்

**கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை** 25

பிறர் மீது பழிச் சொற்களைக் கூறுவதனால் எல்லோரிடமும் விரோதம் ஏற்படும்

**சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை** 26

பரம்பரை விளங்குவதற்கு மக்கட் செல்வத்தோடு வாழ வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு** 27

தன்னுடைய பிள்ளைகளை உலகத்தார் அறிஞர் என்று போற்றுவதே தாய்க்குச் சிறப்பாகும்

**சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு** 28

தவம் செய்வோருக்குச் சிறப்பு சிவபெருமானை துதித்து வழிபாடு செய்வதே

**சீரைத் தேடின் ஏரைத்தேடு** 29

சிறப்பாக வாழ ஆசைப்பட்டால் உழவுத் தொழிலைக் கைக்கொள்ள வேண்டும்

**சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்** 30

நன்மையிலும் தீமையிலும் விலகாமல் இருப்பதே உறவினர்களுக்குச் சிறப்பு ஆகும்

**சூதும் வாதும் வேதனை செய்யும்** 31

குதிரைப் பந்தயம், சீட்டாட்டம், சொக்கட்டான் போன்ற சூதாட்டங்களும் தர்க்கப் பேச்சுக்களும் துன்பத்தை அளிக்கும்

**தெய்தவம் மறந்தால் கைத்தவம் ஆளும்** 32

தான் செய்யக்கூடிய தவத்தை எவன் மறந்து விடுகின்றானோ அவனை அறியாமை ஆட்சி செலுத்தும்

**சேமம் புகினும் யாமத்து உறங்கு** 33

காவல் காப்பதற்குச் சென்ற போதிலும் நள்ளிரவில் சிறிது நேரமாயினும் தூங்குவாயாக

**சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்** 34

செல்வம் இருக்குமானால் பிறருக்கு உணவு அளித்துவிட்டு உண்ண வேண்டும்

**சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்** 35

தூய்மையான உள்ளமும், பொருளும் உள்ளவரானால் வாழ்வில் முழு இன்பமும் அடைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்** 36

முயற்சி செய்து உழைக்காதவர் வறுமையால் துன்புற்றுத் திரிவார்

**தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை** 37

தகப்பனார் கூறும் அறிவுரைக்கு மிஞ்சிய சாஸ்திரம் வேறு இல்லை

**தாயிற் சிறந்து ஒரு கோயிலும் இல்லை** 38

தாயையே வணங்க வேண்டும். அதற்கு மேலான கோயில் எதுவுமே இல்லை

**திரை கடல் ஓடியும் திரவியம் தேடு** 39

அலை கடலுக்கு அப்பால் சென்றாவது பொருள் தேட வேண்டும்

**தீராக் கோபம் போராய் முடியும்** 40

அடங்காத சினம் பெரிய சண்டையில் கொண்டுவிடும்

**துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு** 41

கணவனுக்கு எதிர்பாராத துன்பம் நேரிட்ட பொழுது துடிதுடிக்காத மனைவியானவள் வயிற்றில் கட்டி வைத்துள்ள நெருப்பு போன்றவள்

**தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும்** 42

அவதூறுகளையே பேசித்திரியும் பெண் எமன் என்று சொல்லக் கூடியவள் ஆவாள்

**தெய்வம் சீறின் கைதவம் மாளும்** 43

கடவுளின் கோபத்துக்கு ஆளானால் கைவரப்பெற்ற தவம் அழிந்து போகும்

**தேடாது அழிக்கின் பாடாய் முடியும்** 44

முயன்று பொருளைச் சம்பாதிக்காமல், இருக்கின்றவற்றையே செலவு செய்து கொண்டிருந்தால் முடிவில் துன்பம் உண்டாகும்

**தையும் மாசியும் வையகத்து உறங்கு** 45

தை மாசி மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கினால் காலநிலைக்குத் தகுந்தபடி சுகமாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது** 46

வணங்கி வேலை பார்த்து வயிறு வளர்ப்பதைவிட வேளாண்மை செய்து உண்பதே சிறப்புடையதாகும்

**தோழனோடு ஏழைமை பேசேல்** 47

நெருங்கிய நண்பனிடத்திலும் கூட வறுமை நிலையைச் சொன்னால் மிகவும் கேவலமாக நினைப்பான்

**நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்** 48

நல்லவர்கள் தொடர்பு நன்மையாகும். கெட்டவர்கள் தொடர்பு தீமையாகும்

**நாடு எங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை** 49

தேசம் பூராவும் செழித்துத் தழைத்தால் துன்பமே இல்லை

**நிற்கக் கற்றல் சொல் திறம்பாவை** 50

நிலையான கல்வி கற்றவர் என்பவர் வாக்குறுதி உள்ளவரே ஆவர்

**நீர் அகம் பொருந்திய ஊர் அகத்திரு** 51

தண்ணீர் வசதி நிறைந்த ஊரிலே வாழ்வாயாக

**நுண்ணிய கருமமும் எண்ணித் துணி** 52

மிகச் சிறிய செயலானாலும் கூட தீர யோசித்தே செய்ய வேண்டும்

**நூன் முறை தெரிந்து சீலத்து ஒழுகு** 53

அற நூல்களின் நீதிமுறைகளைத் தெரிந்து ஒழுக்கத்தோடு வாழ வேண்டும்

**நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை** 54

மனதுக்குத் தெரியாமல் ஏமாற்றமான காரியம் ஏதும் இல்லை

**நேரா நோன்பு சீர் ஆகாது** 55

மனம் இணங்கிச் செய்யாத நோன்பு சிறப்பு அளிக்காது

**நைபவர் எனினும் நொய்ய உரையேல்** 56

எளியவர் ஆனாலும் மனம் நோகும் படியான சொற்களைக் கூற வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவார்** 57

தோற்றத்தில் எளிமையாகத் தெரிந்தாலும் செயல் மூலம் பெரியவராகத் திகழ்ந்துவிடுவார்

**நோன்பு என்பது கொன்று தின்னாமை** 58

மற்ற உயிர்களைக் கொன்று உண்ணாமல் இருப்பதே விரதம் ஆகும்.

**பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்** 59

வேளாண்மை செய்துள்ள விளைச்சலைக் காணும் போது அவருடைய நல்வினைப் பயன் தெரிந்துவிடும்

**பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்** 60

பாலினால் தயாரித்த உணவுப் பொருளானாலும் நேரம் தவறி சாப்பிடக்கூடாது

**பிறர் மனை புகாமை அறம் எனத்தகும்** 61

பிறர் மனைவியிடம் இச்சை வைத்து அங்கே போகாமல் இருப்பதே சிறந்த ஒழுக்க நெறி ஆகும்

**பீரம் பேணில் பாரம் தாங்கும்** 62

தன் தாய்ப்பாலைக் குடித்து வளர்ந்த குழந்தை வலிமையோடு பொறுப்பான காரியத்தை நிறைவேற்றும்

**புலையும் கொலையும் களவும் தவிர்** 63

புலால் உணவு, உயிர்க்கொலை, திருட்டுத் தொழில் இவற்றை ஒழித்து விடுவாயாக

**பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்** 64

கீழ்த்தரமானவர்களிடம் சிறப்பு மிக்க பண்பு இருக்காது

**பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்** 65

உண்மையான ஞானிகளுக்கு உறவு என்னும் ஆசை கோபம் எதுவும் இருப்பதில்லை

**பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்** 66

தெரியாதவர் போல் அமைதியாயிருப்பது பெண்களுக்கு ஆபரணத்தைப் போன்ற பண்பாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பையச் சென்றால் வையம் தாங்கும்** 67

மெதுவாகச் செய்யக்கூடிய செயல் வெற்றி அளிக்கும்

**பொல்லாங்கு என்பது எல்லாம் தவிர்** 68

தீமையான செயல்கள் எல்லாவற்றையும் அகற்றிவிட வேண்டும்

**போனகம் என்பது தான் உழந்து உண்டல்** 69

தன்னுடைய சுயமுற்சியால் தேடி உண்பதே சிறப்புடையது

**மருந்தே ஆயினும் விருந்தோடு உண்** 70

அமிர்தமே கிடைத்தாலும் விருந்தினருடன் சாப்பிடுவது சிறப்பு

**மாரி அல்லது காரியம் இல்லை** 71

உலகில் எல்லாக் காரியங்களுக்கும் மழையே முக்கியமானது

**மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை** 72

மின்னல் தோன்றினால் மழை வரும் என்பதற்கு அடையாளம்

**மீகாமன் இல்லா மரக்கலம் ஓடா** 73

மாலுமி இல்லாமல் மரக்கப்பல் ஓடாது

**முற்பகல் செய்யின் பிற்பகல் விளைவும்** 74

முன் பகுதியில் யாருக்கேனும் தீங்கு செய்திடில் பிற்பகுதியில் தனக்கே தீங்கு நேரிடும்

**மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்** 75

அறிவு சான்ற பெரியோர்கள் சொல்லும் அனுபவ மொழிகள் அமிர்தம் போன்றவை ஆகும்.

**மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு** 76

மெத்தையில் படுத்துத் தூங்கினால் நல்ல தூக்கம் வரும்

**மேழிச் செல்வம் கோழை படாது** 77

வேளாண்மையில் வந்த செல்வம் பழுதற்றதாகும்

**மைவிழியார் தம் மனை அகன்று ஒழுகு** 78

கண்ணால் மயக்கும் பொதுமகளிர் வீட்டின் பக்கத்திலே கூட போகாமல் இருப்பது நன்மையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொழிவது மறுக்கின் அழிவது கருமம்** 79

அனுபவம் உள்ளவர் கூறுவதை மீறிச் செய்யும் காரியம் கெட்டுப் போகும்

**மோனம் என்பது ஞான வரம்பு** 80

மௌன நிலை (பேசாமல் இருப்பதானது) ஞானத்தின் தெளிவைக் கூறும்

**வளவன் ஆயினும் அளவு அறிந்து அழித்து உண்** 81

சோழ மன்னனுக்கு இணையான செல்வம் இருப்பினும் வரவுக்கு ஏற்ற செலவு செய்தல் வேண்டும்

**வானம் சுருங்கில் தானம் சுருங்கும்** 82

மழையின் அளவு குறைந்து விடுமேயானால் தானங்களும் குறைவாகிவிடும்

**விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்** 83

விருந்தினரை உபசரிக்கும் பண்பு இல்லாதவர்களிடம் இல்லற தர்மம் நிறைவு பெறாது

**வீரன் கேண்மை கூர் அம்பாகும்** 84

வீரனுடைய நட்பானது தன் கையிலே கூர்மையான அம்பு இருப்பதைப் போலாகும்

**உரவோர் என்கை இரவானது இருத்தல்** 85

அறிஞர் எனக் கூறப்படுவோர் எவரிடமும் சென்று யாசியாமல் இருப்பதே சிறப்பு

**ஊக்கம் உடைமை ஆக்கத்துக்கு அழகு** 86

மனம் தளராமல் உறுதியோடு இருப்பது செழிப்புக்கு உயர்வாகும்

**வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை** 87

தூய்மையான மனத்தவர்க்கு வஞ்சக நினைப்பு எழாது

**வேந்தன் சீரின் ஆம் துணை இல்லை** 88

மன்னனின் கோபத்துக்கு ஆளானவனுக்கு யாருமே துணையாக வரமாட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைகல் தோறும் தெய்வம் தொழு** 89

நாள்தோறும் கடவுளை வணங்குதல் நன்மை தரும்

**ஒத்த இடத்து நித்திரை கொள்** 90

சமமான தரையில் படுத்துத் தூங்குவது நல்லது

**ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்** 91

நீதி நூல்களைப் படிக்காதவர்களுக்கு நல்லொழுக்க அறிவு இருக்காது

*கொன்றை வேந்தன் முற்றும்*

***

# உலகநீதி

**காப்பு**

**உலக நீதி புராணத்தை உரைக்கவே**
**கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு**

உலக நீதி என்னும் புராதனமான கருத்துக்களைக் கூறுவதற்கு கலை நூல்களை ஆராய்ந்து அறிந்து கொள்ள உதவும் விநாயகக் கடவுள் காப்பு ஆவார்

**ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்**
**ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்**
**மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்**
**வஞ்சனைகள் செய்வரோடு இணங்க வேண்டாம்**
**போகாத இடத்தினிலே போக வேண்டாம்**
**போகவிட்டுப் புறம் சொல்லித் திரிய வேண்டாம்**
**வாகாரும் குறவருடைய வள்ளிபங்கன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே** 01

கல்வி பயிலாமல் ஒரு நாளும் இருக்கக்கூடாது. எவர் மீதும் அவதூறு சொல்லக்கூடாது, தாயை ஒருநாளும் மறக்கக்கூடாது, வஞ்சகர்களோடு தொடர்பு கொள்ளக்கூடாது, போகத் தகாத இடத்துக்குப் போகக் கூடாது, இருக்கும் பொழுது புகழ்ந்து கூறி, இல்லாத போது குறை கூறக்கூடாது, வலிமை மிக்க குறவர் குடியிலே பிறந்த வள்ளி நாயகியின் மணாளன் மயில் வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்லவேண்டாம்**
**நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்**
**நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்**
**நல் இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்**
**அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்**
**அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்**
**மஞ்சாரும் குறவருடைய வள்ளிபங்கன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே** 02

மனம் தெரிந்தும் வீணாகப் பொய் கூறக்கூடாது, நிலையற்றது எனத் தெரிந்தும் அதை நிலைநிறுத்த முயலக்கூடாது, நஞ்சுடைய பாம்புடன் ஒருபோதும் பழகக்கூடாது, நற்பண்பு இல்லாதவரோடு தொடர்பு கொள்ளக்கூடாது, அச்சமின்றித் தன்னந்தனியான வழிப்பயணம் போகக்கூடாது, தன்னிடம் வந்தவரை ஒருபோதும் கெடுக்கக்கூடாது, மலை நாட்டினரின் மகளாகிய வள்ளி நாயகியின் மணாளன் மயில் வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

**மனம்போன போக்கு எல்லாம் போகவேண்டாம்**
**மாற்றானை உறவு என்று நம்பவேண்டாம்**
**தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்**
**தருமத்தை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்**
**சினம் தேடி அல்லலையும் தேட வேண்டாம்**
**சினந்து இருந்தார் வாசல் வழிச் சேரவேண்டாம்**
**வனம் தேடும் குறவருடைய வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே** 03

மனம் போனவாறு காரியத்தை செய்யக்கூடாது, பகைவனை உறவினன் என்று நம்பக்கூடாது, செல்வத்தைத் தேடி உண்ணாமல் பத்திரப்படுத்தி வைக்கக்கூடாது, தர்மம் செய்வதை ஒருபோதும் கெடுக்கக்கூடாது, கோபத்தை உண்டாக்கி, அதனால் அல்லல் படக்கூடாது, முன்கோபக்காரர் வீட்டின் பக்கமாகக்கூடப் போகக்கூடாது, காட்டில் மிருகங்களைத் தேடி அலையும் குறவர் குலத்தினரின் மகளாகிய வள்ளி நாயகியின் மணாளன் மயில்வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்**
**கொலை களவு செய்யவாரோடு இணங்கவேண்டாம்**
**கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்**
**கற்புடைய மங்கையரைக் கருதவேண்டாம்**
**கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்**
**கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்**
**மற்று நிகர் இல்லாத வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே** 04

குறைகளைப் பெரிதாகச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது, கொலை, திருட்டுச் செய்பவர்களோடு தொடர்பு கொள்ளக்கூடாது, அறிவாளிகளை ஒரு போதும் இகழ்ச்சியாகப் பேசக்கூடாது, கற்புக்கரசியான பெண்களிடம் ஆசை கொள்ளக்கூடாது, ஆட்சி செலுத்துவோரோடு எதிர்வாதம் செய்யக்கூடாது, கோயில் இல்லாத ஊரில் வசிக்கக்கூடாது, இணையற்ற வள்ளிநாயகியின் மணாளன் மயில்வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

**வாழாமல் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்**
**மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்ல வேண்டாம்**
**வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்**
**வெஞ்சமரில் புறம் கொடுத்து மீள வேண்டாம்**
**தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்**
**தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்**
**வாழ்வாரும் குறவருடைய வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே!** 05

மனைவியோடு வாழாமல், அவள் வீட்டிலே இருக்கும் போது மற்ற பெண்களை விரும்பி அலையக்கூடாது, மனைவி மீது குற்றம் கூறிக்கொண்டிருக்கக்கூடாது, ஆபத்தை உண்டாக்கக் கூடிய படுகுழியில் விழக்கூடாது, கடுமையான சண்டையில் புறமுதுகு காட்டி ஓடிவரக்கூடாது, தாழ்ந்த குணத்தாருடன் சேரக்கூடாது, எளியவர்களைக் குறை கூறக்கூடாது, வாழ்வு மிகக் குறவர் குலத்தினளான வள்ளிநாயகியின் மணாளன் மயில் வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத் திரியவேண்டாம்**
**மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்**
**மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்**
**முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்**
**வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்**
**வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்**
**சேர்த்த புகழாளன் ஒரு வள்ளி பங்கன்**
**திருக்கை வேலாயுதனைச் செப்பாய் நெஞ்சே 06**

வம்பு பேசுவோர் வாயைப் பார்த்து அவர் பின்னே அலையக்கூடாது, தன்னை மதிக்காதவர் வீட்டின் வாசல் படியில் அடி எடுத்து வைக்கக்கூடாது, பெரியவர்கள் சொல்லும் புத்திமதிகளை மறந்து விடக்கூடாது, முன்கோபக்காரர்களோடு சேரக்கூடாது, எழுத்து அறிவித்த உபாத்தியாருக்குச் சேரவேண்டிய சம்பளத்தைக் கொடுக்காமல் வைத்துக் கொள்ளக்கூடாது, வழிப்பறித் திருடர்களோடு சேரக்கூடாது புகழ்வாய்ந்த வள்ளி நாயகியின் மணாளன் வேலாயுதனை வாழ்த்துவாய் மனமே!

**கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்**
**கணக்கு அழிவை ஒருநாளும் பேச வேண்டாம்**
**பொருவார் தம் போர்க்களத்தில் போக வேண்டாம்**
**பொது நிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்**
**இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்**
**எளியோரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்**
**குருகாரும் புனம் காக்கும் ஏழை பங்கன்**
**குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே 07**

சிந்தித்துப் பார்க்காமல் எதையும் செய்யக்கூடாது, பொய்க் கணக்குகளை எழுதக்கூடாது, போர் நிகழக் கூடிய போர்க்களத்துக்குப் போகக் கூடாது, புறம்போக்கு நிலத்திலே வசிக்கக்கூடாது, முதல் மனைவி இருக்க மறு தாரம் செய்து கொள்ளக் கூடாது, ஏழ்மையானவர்களிடம் பகை கொள்ளக் கூடாது, தினைப் புனம் காக்கும் ஏழைபங்காளன் குமரவேளின் திருவடிகளை வாழ்த்துவாய் மனமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேராத இடம் தனிலே சேர வேண்டாம்**
**செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்**
**ஊரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்**
**உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்**
**பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்**
**பிணைபட்டுத் துணை போகித் திரிய வேண்டாம்**
**வாராரும் குறவருடைய வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 08**

சேரத் தகுதி இல்லாதவர்களோடு சேரக்கூடாது, தனக்கு உதவி புரிந்தவரை ஒருபோதும் மறக்கக்கூடாது, கோள் சொல்லிக் கொண்டு ஊரில் அலையக்கூடாது, உறவினர்களை அவமரியாதையாகப் பேசக்கூடாது, பெருமை மிக்க காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடக்கூடாது, ஒருவரோடு சம்மதித்து அவருக்குத் துணையாக அலையக்கூடாது, பெருமையுடைய குறவர் மகளாகிய வள்ளி நாயகியின் மணாளன் மயில் வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

**மண் நின்று மண் ஓரம் சொல்ல வேண்டாம்**
**மனம் சலித்துச் சிலிக்கிட்டு திரிய வேண்டாம்**
**கண் அழிவு செய்து துயர் காட்ட வேண்டாம்**
**காணாத வார்த்தையை கட்டுரைக்க வேண்டாம்**
**புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்**
**புறம் சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்**
**மண் அளந்தான் தங்கை உமை மைந்தன் எங்கோன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 09**

நிலத் தகராறில் ஒரு தலைப்பட்டசமாகத் தீர்ப்பு அளிக்கக்கூடாது, மனம் சலித்து யாரிடமும் சச்சரவு செய்து அலையக்கூடாது, கண் கலங்கி துன்புறுவதைத் தெரியப்படுத்த முயலக்கூடாது, காணாததைக் கற்பனை செய்து கூறக்கூடாது, பிறர் மனம் நோகும்படி எதையும் கூறக்கூடாது, கோள் சொல்லி அலைபவரோடு சேரக்கூடாது, மகாவிஷ்ணுவின் சகோதரி உமாதேவியாரின் அருமைக் குமரன் எங்கள் தலைவன் மயில்வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மறம் பேசி திரிவாரோடு இணங்க வேண்டாம்**
**வாதாடி வழக்கு அழிவு சொல்ல வேண்டாம்**
**திறம் பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம்**
**தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்**
**இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்**
**ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்**
**குறம் பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்**
**குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே** **10**

வீரம் பேசி, வலுச் சண்டைக்கு அலைபவரோடு சேரக்கூடாது, வம்பு பேசி, பொய் வழக்குச் சொல்லக்கூடாது, சமார்த்தியமாகப் பேசி, கலகம் செய்து அலையக்கூடாது, கடவுளை ஒருநாளும் மறந்து விடக்கூடாது, உயிர் போகும் நிலை உண்டானாலும் பொய் சொல்லவே கூடாது, கடவுளை ஒரு நாளும் மறந்து விடக் கூடாது, உயிர் போகும் நிலை உண்டானாலும் பொய் சொல்லவே கூடாது, தன்னை இகழ்ந்து கூறிய உறவினரிடம் உதவி கேட்டு நெருங்கக்கூடாது, குறிசொல்லும் குலத்தினரிளான வள்ளிநாயகியின் மணாளன் குமரவேளின் நாமத்தை வாழ்த்துவாய் மனமே!

**அஞ்சு பேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்**
**அது ஏது இங்கு என்னில் சொல்லக் கேளாய்**
**தஞ்சமுடன் வண்ணான் நாவிதன் தன் கூலி**
**சகல கலை ஓதுவித்த வாத்தியார் கூலி**
**வஞ்சமற நஞ்சு அறுத்த மருத்துவச்சி கூலி**
**மகா நோவுதனைத் தீர்த்த மருத்துவன் கூலி**
**இன்சொல்லுடன் இவர் கூலி கொடாத பேரை**
**ஏதேது செய்வானோ எமன்றானே** **11**

அஞ்சு பேர் கூலியைக் கொடுக்காமல் வைத்துக் கொள்ளக் கூடாது, அது எது என்று கூறுகிறேன், சலவைத் தொழிலாளியின் கூலி, சவரத் தொழிலாளியின் கூலி, கலைகளைப் போதித்த ஆசிரியரின் சம்பளம், பிரசவம் பார்த்த மருத்துவச்சி கூலி, நோய்களைக் குணப்படுத்திய மருத்துவரின் கூலி, இவற்றை எல்லாம் கொடாமல் வைத்திருப்போரை எமன் என்ன பாடுபடுத்துவானோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்**
**கொண்டை மேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்**
**தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்**
**துர்ச்சனராய் திரிவாரோடு இணங்க வேண்டாம்**
**வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்**
**வெற்றியுள்ள பெரியாரை வெறுக்க வேண்டாம்**
**மாறான குறவருடைய வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே** **12**

ஒற்றுமையோடு வாழும் ஒரு குடும்பத்தை இரண்டு ஆக்கி, கெடுக்கக்கூடாது, மலர்களைத் தலையிலே அணிந்து, கொண்டையை உயரமாக்கிக் கொள்ளக்கூடாது, பிறர் மீது அவதூறு சொல்வதையே தொழிலாகக் கொண்டு அலையக்கூடாது, கொடுங்கோலர்களாய் அலைபவர்களோடு சேரக்கூடாது, சக்தியுடைய தெய்வத்தை இகழக்கூடாது, வெற்றியோடு வாழும் பெரியோர்களை வெறுத்துப் பேசக்கூடாது, பகைமிகுந்த குறவர் குலத்தினளான வள்ளி நாயகியின் மணாளன் மயில்வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

**ஆதரித்துப் பலவகையால் பொருள்கள் தேடி**
**அருந்தமிழால் அறுமுகனைப் பாடவேண்டி**
**ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்**
**உண்மையாய்ப் பாடி வைத்த உலகநீதி**
**காதலித்துக் கற்றோரும் கேட்டபேரும்**
**கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு**
**போதமுற்று மிக வாழ்ந்து புகழும் தேடிப்**
**பூலோகம் உள்ள அளவும் வாழ்வார் தாமே** **13**

பலரை ஆதரித்து, பல வழிகளில் செல்வத்தைச் சேர்த்து, உலகநாதன் என்னும் புலவனாகிய யான், அருமையான தமிழில் முருகப்பெருமானைப் பாட விரும்பி முருகப் பெருமானின் திருவருளால், "உலக நீதி"யை உண்மையாகப் பாடி வைத்தேன், இதை ஆவலோடு கற்றவரும் கேட்டவரும் களிப்போடு ஞானமும் புகழும் நல்வாழ்வும் பெற்று உலகம் உள்ளவரை வாழ்வார்களாக!

❋❋❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி வேற்கை

என்னும்

## நறுந்தொகை

### கடவுள் வாழ்த்து

**பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்**
**சரண அற்புத மலர் தலைக்கு அணிவோமே**

ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளான விநாயகப் பெருமானின் பாத கமலங்களை வணங்குவோம்

### நூற் பயன்

**வெற்றி வேற்கை வீர ராமன்**
**கொற்கையாளி குலசேகரன் புகல்**
**நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்**
**குற்றம் களைவோர் குறைவிலாதவரே**

கொற்கை நகரத்து அதிபதியும், குலத்துக்கு மகுடாதிபதியுமான அதிவீர ராமபாண்டியன் கூறிய நறுந்தொகை என்னும் நல்ல நீதிகளை அறிந்து குற்றம் நீக்குவோர் ஒரு குறையும் இல்லாதவரே.

**வாழிய நலனே! வாழிய நலனே!**
**எல்லோரும் நலமுடன் வாழ்க!**

எல்லா நன்மைகளையும் பெற்று வாழ்க! எல்லோரும் நலமுடன் வாழ வேண்டும்

### நூல்

**எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்** **01**

எழுத்துக்களை கல்வியை முதலில் கற்றுத் தந்தவர் தெய்வத் தன்மையானவர்

**கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்** **02**

கல்வி கற்றதற்குச் சிறப்பு, குற்றம் இல்லாமல் தெளிவாகப் பேசுதல் ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்** 03

பணக்காரர்களுக்குச் சிறப்பு, தங்கள் உறவினர் துன்புறும் போது தகுந்த உதவி அளித்து ஆதரிப்பது

**வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்** 04

அந்தணர்களுக்குச் சிறப்பு ஒழுக்க நெறியோடு இருந்து, வேதங்களைப் படிப்பது

**மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை** 05

அரசர்க்குச் சிறப்பு, நீதி வழுவாமல் ஆட்சி புரிவது

**வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல்** 06

வியாபாரிக்குச் சிறப்பு, நேர்மையாகப் பொருள் சம்பாதிப்பது

**உழவர்க்கு அழகு இங்கு உழுது ஊண் விரும்பல்** 07

வேளாண்மையாளர்க்குச் சிறப்பு உழுது பயிர் செய்து உண்பதை விரும்புவது

**மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்** 08

அமைச்சர்க்குச் சிறப்பு, வருங்கால நிகழ்ச்சிஸ்யைப் பற்றி முன்னரே தெரிவிப்பது

**தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை** 09

சேனாதிபதிக்குச் சிறப்பு, அஞ்சா நெஞ்சமும் வீரமும் ஆகும்

**உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்** 10

உணவுக்குச் சிறப்பு, விருந்தாளிகளுடன் அமர்ந்து உண்பது

**பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல்** 11

பெண்களுக்குச் சிறப்பு, எதிர்த்துப் பேசாமல் இருப்பது

**குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்** 12

குடும்பப் பெண்ணுக்குச் சிறப்பு, தன் கணவனைப் பாதுகாப்பது

**விலை மகட்கு அழகு தன் மேனி மினுக்குதல்** 13

தாசிக்குச் சிறப்பு, தன் உடலை அலங்கரித்துக் கொள்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்** 14

அறிவாளிக்குச் சிறப்பு கற்று அறிந்து, அடக்கமாக இருப்பது

**வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை** 15

தரித்திர நிலைமையில் இருந்த போதிலும் அப்பொழுது நேர்மையோடு இருப்பது சிறப்பாகும்

**தேம்படு பனையின் திரள் பழுத்து ஒரு விதை**
**வானுற ஓங்கி வளம் பெற வளரினும்**
**ஒருவருக்கு இருக்க நிழல் ஆகாதே** 16

பனைமரத்தின் சுவைமிக்க பெரிய பழத்தின் ஒரு விதையானது வானளாவி உயர்ந்து வளமாக வளர்ந்து இருந்தாலும் ஒருவர் தங்கி இருக்க நிழல் தராது

**தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை**
**தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்**
**நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை**
**அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு**
**மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே** 17

சிறிய மீனின் முட்டையைக் காட்டிலும் மிகச் சிறியதான ஆலமரத்து விதையானது முளைத்து பெரியமரம் ஆனபின், யானை, குதிரை, தேர், பெரிய காலாட்படை முதலானவற்றோடு அரசர் தங்கி இருக்க நிழல் தரும்

**பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்** 18

உடல் அமைப்பிலும் உடல் அலங்காரத்திலும் பெ்ரியோர் போலக் காட்சி அளிப்பவர் அனைவரும் உண்மையான பெரிய மனிதர்கள் அல்லர்

**சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்** 19

சிறியவர் போல பார்வைக்குத் தோன்றினாலும் அவர்கள் எல்லோரும் உண்மையில் சிறிய மனிதர்கள் அல்லர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்** 20

பெற்ற பிள்ளைகள் அனைவரும் நல்ல பெயர் எடுக்க மாட்டார்கள்

**உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்** 21

உற்றார் அனைவரும் உண்மையான உறவினராக இருக்க மாட்டார்கள்

**கொண்டோர் எல்லாம் பெண்டிரும் அல்லர்** 22

மணம் செய்து கொண்ட மனைவியர் அனைவரும் மனம் இசைந்தவர்களாக இருக்கமாட்டார்கள்

**அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது** 23

எவ்வளவு காய்ச்சிய போதிலும் பசுவின்பால் சுவை குறையாது

**சுடினும் செம்பொன் தன் ஒளி கெடாது** 24

நெருப்பிலே போட்டுச் சுட்ட போதிலும் தங்கத்தின் ஒளி குறையாது

**அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது** 25

சந்தனக் கட்டையை எவ்வளவு அரைத்தாலும் அதன் மணம் குறையாது

**புகைக்கினும் கார் அகில் பொல்லாங்கு கமழாது** 26

தீயில் இட்டு அகில் கட்டையை புகைத்தாலும் மணம் வீசுமே தவிர கெடுதல் இருக்காது

**கலக்கினும் தண் கடல் சேறு ஆகாது** 27

சமுத்திரத்தை எவ்வளவு கலக்கினாலும் சேறு ஆகாமல் தெளிவாக இருக்கும்

**அடினும் பால் பெய்து கைப்பு**
**அறாது பேய்ச் சுரைக்காய்** 28

பாலோடு கலந்து பேய்ச் சுரைக்காயைச் சமைத்தாலும் அதனுடைய கசப்பு மாறவே மாறாது

**ஊட்டினும் பல் விரை உள்ளி கமழாதே** 29

வெள்ளைப் பூண்டுடன் எத்தனை வாசனைப் பொருளைக் கலந்தாலும் அதுகமழாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருமையும் சிறுமையும் தான் தர வருமே** 30

மதிப்பும் தாழ்வும் அவரவர் செயலின் காரணமாகவே வரும்

**சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம்**
**பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே** 31

சிறுவர்கள் அறியாமல் செய்த தவறுகளை எல்லாம் பெரியவர்கள் பொறுத்துக் கொள்வது கடமை ஆகும்

**சிறியோர் பெரும் பிழை செய்தனராயின்**
**பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிது** 32

சிறுவர்கள் பெரிய தவறுகளைச் செய்தார்களானால் பெரியவர்கள் அதைப் பொறுத்துக் கொள்வது அரிது

**நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை**
**நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே** 33

முரடர்களோடு நூறு ஆண்டுகள் பழகினாலும், அந்தப் பழக்கமானது நீரிலுள்ள பாசிபோல் காணப்படுமே ஒழிய, வேர் கொள்ளாது

**ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை**
**இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே** 34

பெரியோர்களுடன் ஒருநாள் பழகிய போதிலும் அந்தப் பழக்காமானது பூமிக்குள் வேர் விடுவது போன்றது ஆகும்

**கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே** 35

கல்வி பயில்வது நன்மையே தரும், பிச்சை எடுக்க நேரிட்டாலும் கல்வி கற்பது நன்மையே அளிக்கும்

**கல்லா ஒருவன் குல நலம் பேசுதல்**
**நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே** 36

கல்வி இல்லாத ஒருவன், தன் குடும்பப் பெருமையைப் பேசுவது, நெல்லில் காணப்படும் பதர் போல ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்**
**கற்றிலன் ஆயின் கீழ் இருப்பவனே** 37

நான்கு வகை குலங்களிலே, மேற்குலத்தில் பிறந்தவன் ஒருவன், கல்வி இல்லாதவன் ஆயின் அவன் தாழ்ந்தவனே

**எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்**
**அக்குடியில் கற்றோரை மேல்வருக என்பர்** 38

யாரானாலும், எந்தக் குலத்தில் பிறந்திருந்த போதிலும் கற்றவரை எல்லோரும் மதிப்போடு வரவேற்பார்கள்

**அறிவுடை ஒருவனை அரசும் விரும்பும்** 39

அறிவுடையோரை அரசும் விருப்பும், மதிக்கும்

**அச்சம் உள் அடக்கி அறிவு அகத்து இல்லாக்**
**கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி**
**எச்சம் அற்று ஏமாந்து இருக்கை நன்று** 40

பயந்த, அறிவு இல்லாத உபயோகமற்ற மக்களைப் பெறுவதை விட அந்தக் குடும்பத்தினர் பிள்ளைப்பேறு இல்லாமலே இன்பமாக வாழ்வது நன்மையாகும்

**யானைக்கு இல்லை தானமும் தருமமும்** 41

(கை இருந்தால் போதுமா!) யானையின் தும்பிக்கை மிகவும் நீளம், ஆனால் அது தான தருமம் செய்வது இல்லை

**பூனைக்கு இல்லை தவமும் தயையும்** 42

பூனையானது கண்களை மூடிக் கொண்டிருந்த போதிலும் தவமும் தயையும் அதற்கு இல்லை

**ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்** 43

ஞானவான்களுக்கு இன்பமும் துன்பமும் இல்லை

**சிதலைக்கு இல்லை செல்வமும் செருக்கும்** 44

பணக்காரர், கர்வம், உள்ளவர் என்று பாராமல் எல்லோருடைய பொருளையும் கரையான் அரித்து விடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலைக்கு இல்லை நீத்தும் நிலையும்** **45**

தண்ணீரில் வாழும் முதலைக்கு ஆழமான இடம், நிலை கொள்ளும் இடம் என்பது இல்லை

**அச்சமும் நாணமும் அறிவு இல்லோர்க்கு இல்லை** **46**

அறிவு இல்லாதவர்கள் தீமையைக் கண்டு பயப்படமாட்டார்கள், பழியைக் கண்டு நாணமாட்டார்கள்

**நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை** **47**

நோயினால் வாடுவோர்க்கு நல்லநாள், கெட்ட நாள் என்பது இல்லை

**கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை** **48**

கெட்டுப் போனவர்களுக்கு நண்பர்களோ சுற்றத்தார்களோ இல்லை

**உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா** **49**

செல்வமும் வறுமையும் ஒரு இடத்திலே நிற்பது இல்லை

**குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்**
**நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்** **50**

யானை மீது குடை நிழலில் அமர்ந்து, பவனி வந்த மன்னரும் கூட வறுமையால் வாகனம் இன்றி நடந்து, மெலிந்து, வேறு ஊர் செல்லவும் கூடும்

**சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்**
**அறக் கூழ் சாலை அடையினும் அடைவர்** **51**

சீர், சிறப்பு, செல்வம், பெருமையோடு வாழ்ந்தவர்கள் வறுமையால் அன்ன சத்திரத்துக்குப் போகவும் கூடும்

**அறத்திடு பிச்சை கூவி இரப்போர்**
**அரசோடு இருந்து அரசாளினும் ஆளுவர்** **52**

தர்மம் கேட்டு, வீடு வீடாகப் பிச்சை எடுத்தவர், அரசுப் பதவி கிடைத்து ஆட்சி புரியவும் கூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குன்று அத்தனை இரு நிதியைப் படைத்தோர்**
**அன்றைப் பகலே அழியினும் அழிவர்** 53

குன்று போல பொன்னும் மணியும் உள்ளோர் ஒரே நாளில் அனைத்தும் அழிந்து வறியவர் ஆகவும் கூடும்

**ஏழு நிலை மாடம் கால் சாய்ந்து உக்கு**
**கழுதை மேய் பாழ் ஆயினும் ஆகும்** 54

ஏழு அடுக்கு மாளிகை சாய்ந்து வீழ்ந்து, கழுதை மேயும் பாழ் நிலமாகவும் கூடும்

**பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்**
**பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்த**
**நெற்பொலி நெடு நகர் ஆயினும் ஆகும்** 55

எருமையும் கழுதையும் மேய்ந்த பாழ் நிலம் பொன் வளை பூண்ட பெண்களும் ஆண்களும் கூடி, நெல் குவியும் பெரியதோர் நகரமானாலும் ஆகலாம்.

**மண அணி அணிந்த மகளிர் ஆங்கே**
**பிண அணி அணிந்து தம் கொழுநரைக் தழீஇ**
**உடுத்த ஆடை கோடியாக**
**முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்** 56

மணக்கோலம் பூண்ட பெண் அங்கே விதைவைக் கோலம் கொண்டு தன் கணவரைத் தழுவி, மணநாளில் உடுத்திய புடவையோடு கூந்தலை விரித்த அழுது புலம்பவும் கூடும்

**இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே** . 57

இல்லாதவர் யாசிப்பதும் இயல்புதான்

**இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே** 58

வசதி உடையோர் யாசிப்பவர்க்கு கொடுப்பதும் கடமையே

**நல்ல ஞாலமும் வானமும் பெறினும்**
**எல்லாம் இல்லை இல் இல்லோர்க்கே** 59

நல்ல உலகையும் வானத்தையும் பெற்றிருப்பவர் ஆனாலும் மனைவி இல்லையானால் அவருக்கு ஒரு சுகமும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தறுகண் யானை தான் பெரிது ஆயினும்**
**சிறுகண் மூங்கில் கோலுக்கு அஞ்சுமே** 60

வீரம் மிக்க யானை பெரிதாக இருந்தாலும் சிறு கணுக்களுடைய மூங்கில் கோலுக்குப் பயப்படும்

**குன்றுடை நெடும் காடு ஊடே வாழினும்**
**புன் தலைப் புல்வாய் புலிக்கு அஞ்சுமே** 61

மலை சூழ்ந்த நீண்ட காட்டினுள் சிறிய தலை உள்ள மான் வாழ்ந்த போதிலும் புலிக்கு அஞ்சும்

**ஆரையாம் பள்ளத்து ஊடே வாழினும்**
**தேரை பாம்புக்கு மிக அஞ்சுமே** 62

ஆரைப் பூண்டுகள் படர்ந்த பள்ளத்தில் தேரை வாழ்ந்தாலும் பாம்புக்கு மிகவும் பயப்படும்

**கொடுங்கொல் மன்னர் வாழும் நாட்டில்**
**கடும் புலி வாழும் காடு நன்றே** 63

கொடுமையான ஆட்சி புரியும் மன்னனின் நாட்டில் வாழ்வதைவிட கடும் புலி வாழும் காடு நன்மை ஆகும்

**சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்**
**தேன் தேர் குறவர் தேயம் நன்றே** 64

அறிவு மிக்க பெரியோர்கள் இல்லாத தொன்மையான ஊரில் இருப்பதை விட தேனைத்தேடி அலையும் குறவரின் காட்டில் வாழ்வது நன்மையே

**காலையும் மாலையும் நான் மறை ஓதா**
**அந்தணர் என்போர் அனைவரும் பதரே** 65

காலையிலும் மாலையிலும் வேதம் ஓதாத அந்தணர் என்பவர் அனைவரும் பதர் போன்றவர்களே

**குடி அலைத்து இரந்து வெங்கோலோடு நின்ற**
**முடியுடை இறைவனாம் மூர்க்கனும் பதரே** 66

மக்களை கொடுமைப்படுத்தி, வரிவசூலித்துக் கொடுங்கோல் செலுத்தும் மூர்க்கனான மன்னனும் பதரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதல் உள பண்டம் கொண்டு வாணிபம் செய்து**
**அதன் பயன் உண்ணா வணிகரும் பதரே 67**

இருக்கும் முதலைக் கொண்டு வியாபாரம் செய்து, அதில் வருகின்ற லாபத்தைக் கொண்டு உண்ணாத வியாபாரியும் பதர் போன்றவரே

**வித்தும் ஏரும் உளவா இருப்ப**
**எய்த்து அங்கு இருக்கும் ஏழையும் பதரே 68**

விதை நெல்லும் ஏரும் கைவசம் இருந்தும் உழுது பயிரிடாமல் சோம்பியிருக்கும் ஏழையும் பதர் போன்றவனே

**தன் மனையாளைத் தாய் மனைக்கு அகற்றிப்**
**பின்பு அவள் பாராப் பேதையும் பதரே 69**

தன்னுடைய மனைவியைத் தாய் வீட்டுக்கு அனுப்பி விட்டு, பிறகு அவளைத் திரும்பியே பாராத அறிவற்றவனும் பதரே

**தன் மனையாளைத் தன் மனை இருத்திப்**
**பிறர் மனைக்கு ஏகும் பேதையும் பதரே 70**

தன்னுடைய மனைவியை தனியே வீட்டில் இருக்கச் செய்து பிறருடைய வீட்டுக்குச் செல்லும் அறிவில்லாதவனும் பதரே

**தன் ஆயுதமும் தன் கையில் பொருளும்**
**பிறன் கையில் கொடுக்கும் பேதையும் பதரே 71**

தொழில் செய்வதற்கான கருவிகளையும் கையிலுள்ள பொருளையும் பிறரிடம் கொடுக்கும் அறிவற்றவனும் பதரே

**வாய் பறையாகவும் நாக்கு அடிப்பாகவும்**
**சாற்றுவது ஒன்றைப் போற்றிக் கேண்மின் 72**

வாய்தம்பட்டம், நாக்கு அதை அடிக்கும் கோல், இவ்வாறு பெரியோர் முரசு கொட்டி முழங்கும் அறிவுரைகளைப் போற்றிக் கோட்பீர்களாக!

**பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால்**
**மெய் போலும்மே மெய் போலும்மே 73**

பொய் சொல்லுபவன் சாமர்த்தியத்தால் அவன் சொல்லக்கூடிய பொய்யானது மற்றவர்களுக்கு உண்மை என எண்ணத் தோன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெய்யுடை ஒருவன் சொல்ல மாட்டாமையால்**
**பொய் போலுமே பொய் போலும்மே** 74

உண்மை பேசக்கூடியவன் ஒருவன் திறமையாகச் சொல்லத் தெரியாததால் அவன் சொல்லுவதை பொய் என எண்ணத் தோன்றும்

**இருவர் தம் சொல்லையும் ஏழுதரம் கேட்டே**
**இருவரும் பொருந்த உரையார் ஆயின்**
**மனுமுறை நெறியின் வழக்கு இழந்தவர் தம்**
**மனமுற மறுகி நின்று அழுத கண்ணீர்**
**முறை யுறந் தேவர் மூவர் காக்கினும்**
**வழி வழி ஈர்வதோர் வாளாகும் மே** 75

வழக்கு ஒன்றில், இரு தரப்பினர் சொல்லும் சொற்களை ஏழு முறை கேட்டு, இருவரும் பொருத்தமாகச் சொல்லாவிட்டால், உண்மையை ஆராய்ந்து, மனுநீதி முறைப்படி இருவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தீர்ப்பு அளிக்காவிடில், வழக்கிலே தோற்றவர், மனம் நொந்து, அழுத கண்ணீரானது வாளாக மாறி, நீதி வழங்கியவர் சந்ததியை வேர் அறுத்துவிடும். மும்மூர்த்திகள் வந்துதடுத்த போதிலும் இயலாது.

**பழியா வருவது மொழியாது ஒழிவது** 76

பழி வந்து துன்புறுத்தும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்

**சுழியா வரு புனல் இழியாது ஒழிவது** 77

சுழித்து வரும் வெள்ளத்திலே இறங்க வேண்டாம்

**துணையோடு அல்லது நெடு வழிபோகேல்** 78

தகுந்த துணை இல்லாமல் நெடுந்தூரம் பயணம் போக ·வேண்டாம்

**புணை மீது அல்லது நெடும் புனல் ஏகேல்** 79

தெப்பத்தின் துணை இல்லாமல் வெள்ளத்தில் இறங்க வேண்டாம்

**ஏழிலார் முலைவரி விழியார் தந்திரம்**
**இயலாதன கொடு முயல்பு ஆகாதே** 80

மயக்கும் கவரச்சிப் பெண்களின் தந்திரத்தினால் தகாத செயல்களில் இறங்கக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழியே ஏகுக வழியே மீளுக** 81

வழியோடு போக வேண்டும், வழியோடு திரும்ப வேண்டும்

**இவைகாண் உலகிற்கு இயலாமாறே** 82

உலகில் நடந்து கொள்வதற்கு இவையே முறையாகும்

*வெற்றி வேற்கை முற்றும்*

❋❋❋

# மூதுரை

## கடவுள் வாழ்த்து

**வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்**
**நோக்கு உண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமல் சார்வார் தமக்கு**

தினந்தோறும் மலர் கொண்டு, விநாயகப் பெருமான் திருவடிகளைத் தொழுவோருக்கு, சொல்வளம் உண்டாகும். திருமகள் அருட் பார்வை கிடைக்கும், உடலை நோய் வருத்தாது.

## நூல்

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி**
**"என்று தருங் கொல்?" என வேண்டா - நின்று**
**தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால்** 01

தென்னை மரத்துக்கு அடியிலே நீர் பாய்ச்சுகிறோம், சுவையுடைய இளநீர் மேலே காய்க்கிறது. அது போல நற்குணமுள்ள ஒருவருக்கு நன்மை செய்தால் நமக்கு நன்மையே உண்டாகும். பதிலுக்கு உதவியை எதிர்பார்த்து எதையும் செய்ய வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல் மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்**
**நீர் மேல் எழுத்துக்கு நேர்** **02**

நல்லவருக்கு செய்த உதவி, கல்லிலே செதுக்கப்பட்டது போல் நிலையாக விளங்கும், இரக்கமற்றவருக்குச் செய்த உதவியானது தண்ணீரிலே எழுதிய எழுத்தைப்போல் அப்பொழுதே அழிந்துவிடும்.

**இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால்**
**இன்னா அளவில் இனியவும் - இன்னாத**
**நாள் அல்லா நாள் பூத்த நன் மலரும் போலுமே**
**ஆள் இல்லா மங்கைக்கு அழகு** **03**

வாலிபத்தில் வறுமையும் முதுமையில் செல்வமும் உண்டானால் அதனால் துன்பமே விளையும், இன்பதைக் காண இயலாது, தேவை இல்லாத போது மலரை யார் சூடிக்கொள்வர்? கணவனைப் பெற்றிராத மங்கை என்னதான் அழகோடு திகழ்ந்தாலும் அதனால் பயன் என்ன?

**அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்**
**நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்** **04**

பாலை எவ்வளவு காய்ச்சினாலும் அதன் சுவை குறையாது. சங்கைச் சுட்டாலும் அதன் நிறம் வெண்மையாகவே காணப்படும். பண்புடைய மேலோர்கள் வறுமையில் வாடிய போதிலும் தங்கள் தகுதியை இழக்க மாட்டார்கள். பண்பற்றவர்கள் நெருங்கிப் பழகினாலும் நல்ல நண்பர்களாக இருக்க மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா 05

நீண்ட உயர்ந்த மரங்கள் ஆனாலும் தகுந்த பருவ காலத்திலே தான் பழங்களை அளிக்கும் என்னதான் அடிக்கடி முயன்ற போதிலும் மேற்கொண்ட காரியங்கள் ஆகும் காலத்திலேதான் கைகூடும்.

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தம்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ? - கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும் பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான் 06

கருங்கல் தூணான போதிலும் அதிகமான பாரத்தைச் சுமத்தினால் அது முறிந்து உடைவதுபோல, மானம் உள்ளோர் விரோதிகளைக் கண்டு பயந்து வணங்காமல் உயிரையே விட்டு விடக்கூடிய இயல்புடையவர்கள் ஆவார்கள்.

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல், தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு - மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம் 07

அல்லி, தண்ணீரின் அளவுக்குத் தகுந்தபடி உயர்ந்து வளரும், ஒருவர் படித்த நூல்களின் தரத்திற்கு ஏற்ப கல்வி அமையும், செல்வமும் நல்வினையை ஒட்டியே இருக்கும், குணமும் குடும்பத்தை அனுசரித்தே காணப்படும்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலம் மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே, அவரோடு
இணங்கி இருப்பதுவும் நனறே 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லகுணம் உள்ளவரைக் காண்பது, அவர் கூறும் வழிகளைக் கேட்பது, அவருடைய பண்புகளை எடுத்துச் சொல்வது, அத்தகையவரோடு இணைந்து இருப்பது எல்லாமே நன்மை தரும்.

**தீயாரைக் காண்பதுவும் தீதே, திரு அற்ற**
**தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார்**
**குணங்கள் உரைப்பதுவும் தீதே, அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் தீதே** 09

கெட்ட குணத்தவரைக் காண்பது, அவருடைய பயனற்ற மொழிகளைக் கேட்பது, அவருடைய கெட்ட குணங்களைப் பேசுவது, அத்தகையவரோடு சேர்ந்து இருப்பது யாவுமே தீமையை உண்டாக்கும்.

**நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்**
**நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லார்க்கும் பெய்யும் மழை** 10

நெற் பயிருக்கு இறைத்த தண்ணீரானது கால்வாய் வழியாகச் சென்று புல்லுக்கும் பயன்படுகிறது. இவ்வுலகில் நல்லவர் ஒருவர் இருக்கும் காரணமாகப் பொழியும் மழையானது மற்ற அனைவருக்கும் பயன்படுகிறது.

**பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்**
**விண்டு உமிபோனால் முளையாதாம் - கொண்ட பேர்**
**ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவு இன்றி**
**ஏற்ற கருமம் செயல்** 11

அரிசி விளைவதற்கு உமியின் துணை தேவைப்படுகிறது. ஒரு காரியத்தை செய்து முடிக்க எவ்வளவு திறமை இருந்த போதிலும் தகுந்த ஒருவர் துணை இல்லாமல் தனியாக அதைச் செய்துவிட முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மடல் பெரிது தழை, மகிழ் இனிது கந்தம்**
**உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - கடல் பெரிது**
**மண்ணீரும் ஆகாது, அதன் அருகே சிற்றூறல்**
**உண்ணீரும் ஆகி விடும்** 12

தாழம்பூவின் மடல் பெரிது, ஆனால் அதைவிட மகிழம் பூ சிறிது என்றாலும் மணம் அதிகம். கடல் பெரிதாக இருந்த போதிலும் அதன் நீர் அழுக்கைப் போக்கக் கூட உதவாது. அதன் அருகே உள்ள ஊற்று நீரோ குடிப்பதற்கு உபயோகமாகும். சிறிய உருவமாயிருந்த போதிலும் அவரை மதியாமல் இருக்க வேண்டாம்.

**கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே**
**நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய**
**மாட்டாதவன் நன் மரம்** 13

கல்வி அறிவுடையோர் சபையிலே ஒருவர் கொடுக்கும் ஓலைச் சுவடியைப் படிக்கத் தெரியாதவனும் பிறருடைய உள்ளக் குறிப்பை உணராமல் நிற்பவனும் கொம்பு கிளைகளுடன் காட்டிலே நிற்கின்ற மரத்தைப் போன்றவன்

**கானமயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி**
**தானும் அதுவாகப் பாவித்து - தானும் தன்**
**பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி** 14

முறையாகக் கல்வி கற்காமல், கற்றவரைப் போல் பாசாங்கு செய்வது, தோகை விரித்து ஆடும் மயிலைப் பார்த்து தானும் மயிலாகக் கருதி வான் கோழி தன்னுடைய சிறகை விரித்து ஆடுவது போலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி**
**ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல் - பாங்கு அழியாப்**
**புல் அறிவாளருக்குச் செய்த உபகாரம்**
**கல்லின் மேல் இட்ட கலம்** **15**

பாம்பு கடித்துக் கிடந்த வரிப்புலிக்கு விஷ வைத்தியம் செய்த மருத்துவன் அப்போதே அந்தப் புலிக்கு இரையானது, போல் அற்பபுத்தி உடையவர்களுக்கு உதவி செய்தால், கல்லின் மேல் போட்ட மண்பானையைப் போல் நமக்கே தீமையாய் முடியும்.

**அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டா : மடைத் தலையில்**
**ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு** **16**

ஓடையிலே சிறு மீன்கள் ஓடுவதை விட்டுவிட்டு, பெரிய மீனாக வருவதைக் கொத்திப் பிடிப்பதற்காகக் கொக்கு அடங்கி இருக்கும். அதுபோல, அடக்கமாக இருப்பவர் அறிவற்றவர் என்று அவரை அலட்சியமாக நினைக்க வேண்டாம்.

**அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - அக்குளத்தில்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**
**ஒட்டி உறவார் உறவு** **17**

தண்ணீர் உள்ள குளத்திலே கொட்டி, ஆம்பல், நெய்தல் ஆகியன முளைக்கின்றன. அதிலே நீர்ப் பறவைகளும் வாழ்கின்றன. குளத்திலே நீர் வற்றியதும் பறவைகள் எல்லாம் பறந்து விடுகின்றன. ஆனால், கொட்டி, ஆம்பல், நெய்தல் மட்டும் வாடிக் கிடக்கின்றன. அதுபோல், வாழ்விலும் தாழ்விலும் நீங்காமல் சேர்ந்து இருப்பவரே உண்மையான உறவினர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீரியர் கெட்டாலும் சீரியரே, சீரியர் மற்று**
**அல்லாதவர் கெட்டால் அங்கு என்னாகும்? - சீரிய**
**பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும், என் ஆகும்**
**மண்ணின் குடம் உடைந்தக் கால்? 18**

சிறப்புமிக்கவர்கள் வறுமையில் வாடிய போதிலும் அவர்களுடைய சிறப்புக்குன்றாது, பண்பற்றவர்கள் கெட்டால் அவர்கள் கதி என்ன ஆகும்? தங்கக்குடம் உடைந்து விடுமானால் மறுபடியும் தங்கமாகிவிடும், மண் குடம் உடைந்தால் என்ன பயன்?

**ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்**
**நாழி முகவாது நானாழி - தோழி**
**நிதியும் கணவனும் நேர் படினும் தம்தம்**
**விதியின் பயனே பயன் 19**

கடலிலுள்ள நீரை எவ்வளவு தான் அமிழ்த்தி மொண்டாலும் ஒரு படி அளவில் நான்குபடி கொள்ளாது, செல்வமும் கணவனும் ஒரு பெண்ணுக்கு கிடைத்த போதிலும் அவள் விதிப்படியே தான் வாழ்வு அமையும்

**உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்குவேண்டா**
**உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா**
**மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்**
**அம் மருந்து போல்வாரும் உண்டு 20**

உடலில் தோன்றிய நோயே அதனைக் கொல்லுகிறது. அதைப்போல, கூடப்பிறந்தோர் உதவிபுரியும் உறவினர் என எண்ண வேண்டாம், பெரிய மலையில் உள்ள மூலிகை உயிரைக் காப்பாற்றுவது போல, எவரோ ஒருவர் உதவி செய்யக்கூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை**
**இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்**
**வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்**
**புலி கிடந்த தூறாய் விடும்** 21

நற்குணம் உள்ள மனைவி ஒரு இல்லத்துக்கு வாய்த்து விடுவாளானால், அங்கே எந்தக் குறையும் இருக்காது,. கொடுமையும் எதிர்த்து வாதாடுவதுமான மனைவி இருப்பாளானால் அந்த இல்லமானது புலி தங்கிய குகைபோல் ஆகும்.

**எழுதியவாறே தான் இரங்கும்மட நெஞ்சே!**
**கருதியவாறு ஆமோ கருமம்? : கருதிப்போய்க்**
**கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்**
**முற்பாவத்தில் செய்த வினை** 22

நினைத்தபடி எல்லாம் நடந்து விடுமா? விதிப்படியே தான் எல்லாம் நடக்கும் கற்பக விருட்சத்தை அடைந்தோருக்கு எட்டிக்காய் கிடைக்குமானால், விதியின் பயனே என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

**கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடும் சினத்துப்**
**பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வரே - வில் பிடித்து**
**நீர் கிழிய எய்த வடுப் போல மாறுமே**
**சீர் ஒழுகு சான்றோர் சினம்** 23

கீழ்த்தரமானவர்களுடைய கோபமானது கல் பிளப்பது போல் உடைந்து பிரிந்து விடும் தன்மையானது. தங்கத்திலே. பிளவு உண்டானால் மீண்டும் இணைந்து விடுவது போல் யாரேனும் கூட்டுவித்தால் கூடிவிடும் தன்மையுடையோரும் உள்ளனர். நீரிலே அம்பு எய்தால் அது உடனே மறைவது போல் சான்றோர்களுக்கு ஏற்படும் கோபமானது உடனே மாறிவிடும் தன்மையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற் போல்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா**
**மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்**
**காக்கை உகக்கும் பிணம் 24**

அன்னப் பறவையானது தாமரை உள்ள குளத்தைத் தேடிச் செல்வது போல, அறிஞர் அறிஞரையே தேடிச் செல்வர், காக்கையானது சுடு காட்டில் பிணத்தைத் தேடி செல்வது போல், அறிவற்றவரை அறிவற்றவரே தேடிச் செல்வர்.

**நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்**
**அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு - நெஞ்சில்**
**கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்**
**கரவிலா நெஞ்சத் தவர் 26**

விஷம் இல்லாத நீர்ப்பாம்பானது பயமின்றி எங்கும் கிடப்பது போல், வஞ்சனை இல்லாத உள்ளத்தினர் வெளிப்படையாகப் பேசுவர். விஷத்தோடு கூடிய நாகபாம்பானது புற்றில் மறைந்து வசிப்பது போல், வஞ்சகர் கபடமாகவே பேச்வர்

**மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன் - மன்னர்க்குத்**
**தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்**
**சென்ற இடம் எல்லாம் சிறப்பு 26**

அரசனையும் அறிஞனையும் ஒப்பிட்டால், அறிஞனே சிறந்தவன், அரசனுக்குத் தன்னுடைய நாட்டிலே மட்டும் கௌரவம், அறிஞனுக்குப் போகும் இடங்களில் எல்லாம் பெருமை உண்டாகும்.

**கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்**
**அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிய**
**வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே**
**இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண் 27**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடருக்குக் கற்றவர் சொல்லும், தீயவர்களுக்கு தருமமும், வாழைக்கு அதன் காயும், பொருத்தமற்ற மனைவியால் கணவனுக்கும் எமன் போல, துன்பத்தை அளிக்கக் கூடியதாகும்.

**சந்தனமென் குறடு தான் தேய்ந்த காலத்தும்**
**கந்தம் குறைபடாது, ஆதலால் - தம்தம்**
**தனம் சிறியார் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்**
**மனம் சிறியர் ஆவரோ மற்று** **28**

சந்தனக் கட்டையானது எவ்வளவு தேய்ந்த போதிலும் அதன் மணம், குன்றாது, அரசருடைய செல்வமானது குறைந்து, வறுமையுற்ற போதிலும் அவர்களுடைய தாராளத் தன்மையானது குறைந்து விடாது.

**மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல**
**உருவும் உயர் குலமும் எல்லாம் - திரு மடந்தை**
**ஆம் போது அவளோடும் ஆகும், அவள் பிரிந்து**
**போம் போது அவளோடும் போம்** **29**

சூழ்ந்து வாழும் உறவினர், அடைந்துள்ள செல்வம், அழகான தோற்றம் இவை யாவும் லட்சுமி தேவியின் அருள் இருந்தால் கைகூடும் அவள் அருள் நீங்கும் பொழுது எல்லாம் போய்விடும்.

**சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை**
**ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்**
**குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து**
**மறைக்குமாம் கண்டீர் மரம்** **30**

மரத்தை வெட்டுகின்ற வரை அது வெயிலை மறைத்து குளிர்ந்த நிழலைத் தருவது போல் தாம் சாகும் வரை தமக்குப் பிறர் தீமை புரிந்த போதிலும் சான்றோர் இயன்றவரை அவரைக் காப்பறாற்றுவார்.

*மூதுரை முற்றும்*

❋❋❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி

## கடவுள் வாழ்த்து

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை**
**நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்**
**சங்கத் தமிழ் மூன்றும் தா**

விநாயகப் பெருமானே, அடியேனுடைய பூஜையையும் நிவேதனத்தையும் ஏற்றுக்கொண்டு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ச் செல்வத்தையும் எனக்கு அருள் புரிய வேண்டும்.

## நூல்

**புண்ணியம் ஆம் பாவம் போம் போன நாள் செய்த அவை**
**மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணும் கால்**
**ஈது ஒழிய வேறு இல்லை - எச் சமயத்தார் சொல்லும்**
**தீது ஒழிய நன்மை செயல் 01**

முற் பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களே இப் பிறப்பில் தேடி வைத்த பொருளாகும், தீமையை விலக்கி நன்மையைச் செய்வதே எல்லா மதத்தினரும் போதிக்கும் உபதேச மொழியாகும்.

**சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை, சாற்றும் கால்**
**நீதி வழுவா நெறி முறையின் - மேதினியில்**
**இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்**
**பட்டாங்கில் உள்படி 02**

இரண்டே சாதிகள் தான் உலகிலே உள்ளன. துன்புறுவோர்க்கு உதவி புரிவோர் உயர்ந்த சாதியினர், உதவி புரியாதவர் தாழ்ந்த சாதியினர், உண்மை நூல்கள் போதிப்பதும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடும்பைக்கு இடும்பை இயல்பு உடம்பு இது அன்றே**
**இடும் பொய்யை மெய் என்று இராதே - இடும் கடுக**
**உண்டாயின் உண்டாகும் ஊழில் பெரு வலிநோய்**
**விண்டாரைக் கொண்டாடும் வீடு 03**

நிலையற்ற இவ்வுடலை நிலையானது என்று எண்ணிக் கொண்டிருக்காமல், விரைவாக தர்மம் செய்வீர்களாக, பந்தபாசங்களை நீக்கியவர்களைப் போற்றுபவர், முக்தி அடைவர்

**எண்ணிஒரு கருமம் யார்க்கும் செய்ய ஒண்ணாது**
**புண்ணியம் வந்து எய்த போது அல்லால் - கண் இல்லான்**
**மாங்காய் விழ எறிந்த மாத்திரை கோல் ஒக்குமே**
**ஆங்காலம் ஆகும் அவர்க்கு 04**

ஒரு காரியத்தை செய்ய முற்பட்டாலும் புண்ணியமான காலத்திலே தான் அது கைகூடும் மற்ற காலத்தில் செய்ய எண்ணுவது பார்வையற்றவன் மாங்காய் பறிக்க மாத்திரைக் கோலை வீசியது போலாகும்.

**வருந்தி அழைத்தாலும் வாராத வாரா**
**பொருந்துவன போமின் என்றால் போகா - இருந்து ஏங்கி**
**நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து**
**துஞ்சுவதே மாந்தர் தொழில் 05**

எவ்வளவு தான் முயன்ற போதிலும் கிடைக்கக் கூடியவை தான் கிடைக்கும், கிடைக்க வேண்டியதை வேண்டாம் என்று வெறுத்தாலும் விட்டு நீங்காது, இதை உணராமல் நினைத்து, மனம் நொந்து வாடி மாண்டு போவதே மனிதரின் தொழில் ஆகிவிட்டது.

**உள்ளதுஒழிய ஒருவர்க்கு ஒருவர்சுகம்**
**கொள்ளக் கிடையா குவலயத்தில் வெள்ளக்**
**கடல் ஓடி மீண்டு கரையேறினால் என்**
**உடலோடு வாழும் உயிர்க்கு 06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் வாழ்பவர்க்குக் கிடைக்கக்கூடியதே கிடைக்கும், பிறர் சுகம் அனுபவிக்கக் கிடையாது, கடல் கடந்து போய் பொருள் ஈட்டித் திரும்பினாலும் கிடைப்பது தான் கிடைக்கும்.

**எல்லாப் படியாலும் எண்ணினால் இவ் வுடம்பு**
**பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை - நல்லார்**
**அறிந்திருப்பார் ஆதலினால் ஆம் கமல நீர் போல்**
**பிரிந்திருப்பர் பேசார் பிறர்க்கு** 07

பல வகையாலும் நினைத்துப் பார்த்தால், இந்த உடலானது பலவிதமான நோய்களுக்கு இருப்பிடமாகும், அறிவுடையோர் இதை அறிந்திருப்பதோடு, இதைப்பற்றி எவரிடமும் பேசாமல் தாமரை இலைத் தண்ணீர் போல வாழ்வர்

**ஈட்டும்பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்**
**கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - தேட்டம்**
**மரியாதை காணும் அகிதலத்தீர் கேண் மின்**
**தரியாது காணும் தனம்** 08

உலகில் வாழ்பவர்களே! பெரு முயற்சியால் அளவற்ற செல்வத்தைத் தேடினாலும் நல்லகாலம் இருந்தால் அது நிலைக்கும், இல்லையேல் நிலைக்காது, மரியாதை ஒன்றே நிலையாக இருக்கக் கூடியது.

**ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு**
**ஊற்றுப் பெருக்காம் உலகு ஊட்டும் - ஏற்றவர்க்கு**
**நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்**
**இல்லை என மாட்டார் இசைந்து** 09

ஆற்றிலே வெள்ளம் வடிந்து வெப்பத்தால் மணல் சுட்ட போதிலும், மக்களுக்கு ஊற்று நீர் வழங்குவது போல், நல்ல குடும்பத்தினர் வறுமை நிலையில் இருந்த போதிலும், வந்து யாசிப்பவருக்கு இல்லை என்று கூறாமல் இயன்றதைக் கொடுப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவரோ? மா நிலத்தீர் - வேண்டாம்**
**"நமக்கும் அது வழியே, நாம் போம் அளவும்**
**எமக்கு என்" இட்டு உண்டு இரும் 10**

இறந்தவரை நினைத்து வருடக் கணக்கில் அழுது புலம்பிக் கொண்டிருந்த போதிலும் அவர் ஒரு போதும் திரும்பி வரப் போவதில்லை, நாமும் ஒருநாள் அவ்வாறே போக வேண்டியது தானே! என்று எண்ணி, இருக்கும் வரையில் தர்மங்கள் செய்து, நன்றாகச் சாப்பிட்டு சுமாக இருப்பீர்களாக!

**ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்**
**ஒரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் : ஒரு நாளும்**
**என் நோவு அறியாய் இடும்பை கூர் என் வயிறே!**
**உன்னோடு வாழ்தல் அரிது 11**

தினந்தோறும் உண்பதை ஒழிக்க இயலாது, இரண்டு நாட்களுக்கு சேர்ந்தாற் போல் உண்ணவும் முடியாது, என்னுடைய துன்பத்தை உணராத இந்த வயிறுடன் வாழ்வது மிகவும் சிரமம்

**ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய**
**வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே : ஏற்றம்**
**உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்**
**பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு 12**

ஆற்றங்கரையில் இருக்கும் மரமும் , அரச மரியாதையோடு வாழ்ந்த வாழ்வும் கூட, ஒரு நாள் அழிந்து விடும், ஆனால் வேளாண்மை செய்து வாழ்வதற்கு இருக்கும் சிறப்பு வேறு எந்தத் தொழிலுக்கும் இல்லை

**ஆவாரை யாரோ அழிப்பார்? அது அன்றிச்**
**சாவாரை யாரே தவிர்ப்பவர்? ஓவாமல்**
**ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?**
**மெய் அம்புவி அதன் மேல் 13**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையோடு உலகில் வாழ்பவரை எவராலும் அழிக்க முடியாது மரணம் அடையக்கூடியவரை தடுத்து நிறுத்தவும் இயலாது, தினந்தோறும் பிச்சை எடுத்து திரிவோரையும் நிறுத்த முடியாது.

**பிச்சைக்கு மூத்தகுடி வாழ்க்கை பேசுங்கால்**
**இச்சை பல சொல்லி இடித்து உண்கை - சீச்சீ**
**வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது**
**உயிர் விடுகை சால உறும் 14**

பிச்சை எடுத்து உண்பதைக் காட்டிலும் இழிவானது பிறரிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி அவமானத்துக்கு ஆளாகி வயிறு வளர்ப்பதாகும். அதைக் காட்டிலும் மானத்தோடு உயிரைத் துறப்பது உயர்வாகும்.

**சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு**
**அபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்**
**இதுவே, மதியாகும், அல்லாத எல்லாம்**
**விதியே மதியாய் விடும் 15**

பஞ்சாட்சர மந்திரத்தை தினந்தோறும் தியானிப்பவர்களுக்கு ஒரு கெடுதலும் நேராது, இதுவே துன்பத்தை நீக்க வழி, மற்றவை யாவும் விதிப்படியே ஆகும்.

**தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணம் கொடையால்**
**கண் நீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை**
**கற்பு அழியா ஆற்றால்! கடல் சூழ்ந்த வையகத்துள்**
**அற்புதமாம் என்றே அறி 16**

நிலத்தின் தன்மையால் தண்ணீரையும், ஈயும் தன்மையால் நல்லவர்களுடைய சுபாவத்தையும், கருணை மிகுந்த பார்வையால் கண்களின் பெருமையையும், கற்பு நெறியால் பெண்களின் நேர்மையையும் காணலாம். இவையே உலகில் வியக்கத்தக்கது என அறிவீர்களாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இரு நிதியம்? - வையத்து**
**அறும் பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று**
**வெறும் பானை பொங்குமோ மேல்!** 17

முற்பிறவியில் செய்த தீவினையால் துன்புறும் போது தெய்வத்தை நொந்து கொண்டால் செல்வம் யாவும் சேர்ந்து விடுமோ? வாழ்ந்த காலத்தில் பாவத்தை நீக்க, வழங்காதவர்களுக்கு இப்பொழுது வெற்றுப்பானை பொங்கி விடுமா?

**பெற்றார் பிறந்தார் பெரு நாட்டார் பேருலகில்**
**உற்றார் உகந்தார் என வேண்டார் - மற்றோர்**
**இரணங் கொடுத்தால் இடுவர், இடாரே**
**சரணம் கொடுத்தாலும் தாம்** 18

பெற்றோர், கூடப்பிறந்தவர், ஊர்க்காரர், உறவினர், பிரியமானவர் என எண்ணி உதவி புரியா உலோபிகள், தங்களைத் துன்புறுத்தியவர்களுக்கே கொடுப்பார்கள், மற்றபடி அவர்கள் காலில் வீழ்ந்து பணிந்தாலும் கொடுக்கமர்ட்டார்கள்

**சேவித்தும் சென்று இரந்தும் தெண் நீர்க்கடல் கடந்தும்**
**பாவித்தும் பாராண்டுபடும் பாட்டு இசைத்தும் போவிப்பம்**
**பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்**
**நாழி அரிசிக்கே நாம்** 19

பசியின் கொடுமை தாளாமல் பிறரை வணங்கியும் யாசித்தும், கடல் கடந்து சென்றும், அறிவற்றவரை பெரிய மனிதராகக் கருதியும், புகழ்ந்து பாடியும் ஒரு படி அரிசிக்காக இந்த உடலைப் போக்குகிறோம்.

**அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்**
**கொம்மை முலை பகர்வார் கொண்டாட்டம் - இம்மை**
**மறுமைக்கும் நன்று அன்று மா நிதியம் போக்கி**
**வறுமைக்கு வித்தாய் விடும்** 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மிக் கல்லை துணையாகக் கட்டிக்கொண்டு ஆற்று வெள்ளத்தில் இறங்குவது போல், விலைமகளை விரும்பி, ஆசைப்பட்டுப் பெரும் செல்வத்தை அழித்து இன்புறுவது வறுமைக்கு ஆளாகி இப்பிறப்பிலும் அடுத்த பிறப்பிலும் துன்புற நேரிடும்.

**நீரும் நிழலும் நிலம் பொதியும் நெல் கட்டும்**
**பேரும் புகழும் பெரு வாழ்வும் - ஊரும்**
**வருந்திருவும் வாழ் நாளும் வஞ்சமில்லார்க்கு என்றும்**
**தரும் சிவந்த தாமரையாள் தான்** 21

வஞ்சனை இல்லதாவருக்கு நீர், வீடு, நெல், பெயர், புகழ் சிறப்பான வாழ்வு, கிராமம், வளரும் செல்வம், நீடித்த ஆயுள் ஆகியன திருமகளின் திருவருளால் எந்நாளும் கிடைக்கும்

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்கேடு கெட்ட**
**மானிடரே கேளுங்கள், கூடு விட்டு இங்கு**
**ஆவிதான் போயின பின்பு யாரே அனுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப் பணம்** 22

வருந்தி உழைத்துத் தேடிய செல்வத்தைக் கொண்டு தானும் சுகப்படாமல், பிறருக்கு வழங்காமல், பூமியில் புதைத்து வைத்து, அலையும் கேடு கெட்ட மனிதர்களே, உங்களுடைய உயிர்போன பிறகு, அந்தப் பணத்தை யார் அனுபவிப்பார்?

**வேதாளம் சேரும் வெள் எருக்குப் பூக்குமே**
**பாதாள மூலி படருமே : மூதேவி**
**சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்று ஓரம் சொன்னார் மனை** 23

நீதி மன்றத்தில் ஒரு சார்பாக (நடுநிலமை இல்லாமல்) நீதி வழங்குபவர் வீட்டிலே பேய்கள், மூதேவி, பாம்புகள் முதலியன குடி இருப்பதோடு எருக்கம் பூவும் பாதாள மூலிக்கொடியும் படர்ந்து பாழ் அடைந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீறு இல்லா நெற்றி பாழ், நெய் இல்லா உண்டிபாழ்**
**ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - மாறுஇல்**
**உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ், பாழே**
**மடக் கொடி இல்லா மனை** **24**

திருநீறு அணியாத நெற்றி, நெய் இல்லாத உணவு, நதி இல்லாத ஊர், கூடப்பிறவாத பிறப்பு, மனைவி இல்லாத வீடு இவை யாவும் சிறப்புடையன அல்ல

**ஆனமுதலில் அதிகம் செலவு ஆனால்**
**மானம் அழிந்து மதி கெட்டுப் - போன திசை**
**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லனாம் நாடு** **25**

முதலுக்கு மேல் செலவு செய்பவன் மானம் கெட்டு அறிவு இழந்த திருடனாகி, ஏழு பிறப்பிலும் தீயவனாகி நல்லவர்களுக்கும் பொல்லாதவன் ஆவான் என்பதை அறிவாயாக!

**மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்**
**கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திடப் பறந்து போம்** **26**

பெருமை, குடும்பப் பெருமை, படிப்பு, அழகு, உண்மை, உயர்வு, ஈகை, நோன்பு, உயர்வு, தொழில் முயற்சி, மங்கையரிடம் ஆசை ஆகிய பத்தும் பசி வந்துவிட்டால் பறந்து ஓடிவிடும்.

**ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்**
**அன்றி அதுவரினும் வந்து எய்தும் - ஒன்றை**
**நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்**
**எனை ஆளும் ஈசன் செயல்** **27**

ஒன்றை நினைத்தால் அதற்கு பதிலாக வேறு ஒன்று கிடைக்கும், அல்லது அதுவே கிடைத்தாலும் கிடைக்கக்கூடும், எண்ணாதது ஒன்று எதிரே வந்து நின்றாலும் நிற்கும், எல்லாம் இறைவனுடைய திருவருளே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்**
**எண்பது கோடி நினைந்து எண்ணுவன - கண் புதைந்த**
**மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம் போலச்**
**சாந்துணையும் சஞ்சலமே தான்** **28**

சாப்பிடுவது ஒரு படி சோறு, உடுத்திக் கொள்வது நான்கு முழ வேட்டி, ஆனால் நினைப்போ கோடி காரியங்களை நினைத்துக் கொண்டிருக்கும் கண்மூடித்தனமான இந்த மனித வாழ்வானது உயிர் உள்ளவரை துன்பமாகத்தான் இருக்கும்.

**மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி**
**இரந்து அழைப்பார் யாவரும் அங்கில்லை - சுரந்து அமுதம்**
**கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்**
**உற்றார் உலகத்தவர்** **29**

மரத்தில் பழம் பழுத்திருக்கும் பொழுது வெளவாலை யாரும் கூவி அழைப்பது இல்லை, பசு கன்றுக்குப் பால் சுரந்து கொடுப்பது போல், தாரளமாக அள்ளிக் கொடுத்தால், உலகத்தில் எல்லோரும் உறவினரைப் போல் வந்து கூடுவார்கள்

**தாம் தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்**
**பூந்தாமரை யோன் பொறி வழியே - வேந்தே**
**ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா**
**வெறுத்தாலும் போமோ விதி** **30**

முற் பிறவியிலே, அவரவர் செய்த நல்வினை தீவினைகளை பிரமன் விதித்தபடியே அனுபவிப்பார்கள், தீவினை செய்தவர்களை நாம் என்ன செய்ய இயலும்? ஊர் முழுவதும் ஒன்று திரண்டு வெறுத்தாலும் விதி விட்டுப் போகுமா?

**இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று - சாலும்**
**ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று - வழுக்குடைய**
**வீரத்தின் நன்று விடாநோய், பழிக்கு அஞ்சாத்**
**தாரத்தின் நன்று தனி** **31**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் உடைய பாட்டும் ஒழுக்கம் இல்லாத உயர் குடும்பமும் தவறான வீரமும் பிறர் பழிக்கு ஆளான மனைவியுடன் வாழ்வதும் துன்பத்தைத் தரும்

**ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்**
**மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறு இடும்**
**தண்ணீரும் வாரும், தருமமே சார்பாக**
**உண்ணீர்மை வீறும் உயர்ந்து** 32

செல்வமானது ஆற்று வெள்ளத்தின் மேடு பள்ளம் போன்றது. ஆகையால் செல்வம் இருக்கும் பொழுதே யாசிப்பவருக்கு உணவும் நீரும் வழங்குங்கள்,. அந்தத் தர்மத்தின் பயனாக உள்ளத்திலே தூய்மை பொலிவுறும்.

**வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம், வேழத்தில்**
**பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது நெட்டிருப்புப்**
**பாரைக்கு நெக்கு விடாப்பாறை பசுமரத்தின்**
**வேருக்கு நெக்குவிடும்** 33

யானை மேலே பாயும் அம்பானது பஞ்சுப் பொதியில் பாயாது, கடற்பாறைக்குப் பிளக்காத கற்பாறையானது பச்சை மரத்தின் வேருக்குப் பிளந்து கொடுக்கும், கடுமையான சொல்லானது இனிமையான சொல்லை வெற்றி கொள்ளாது.

**கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்**
**எல்லோரும் சென்று அங்கு எதிர் கொள்வர் - இல்லானை**
**இல்லாளும் வேண்டாள், மற்று ஈன்று எடுத்த தாய் வேண்டாள்**
**செல்லாது அவன் வாயிற் சொல்** 34

படியாதவன் என்றாலும் அவனிடம் பணம் இருந்தால் எல்லோரும் அவனை மதிப்பார்கள், பணம் இல்லாதவனை அவன் மனைவியும், பெற்ற தாயும்கூட விரும்பமாட்டார்கள், அவன் பேச்சுக்கு மதிப்பு இருக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூவாதே காய்க்கும் மரமும் உளமக்கள் உளும்**
**ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே - தூவா**
**விரைத்தாலும் நன்று ஆகா வித்தெனவே பேதைக்கு**
**உரைத்தாலும் தோன்றாது உணர்வு** **35**

பூக்காமல் காய்க்கின்ற மரங்கள் இருப்பதைப் போல, மனிதர்களிடையேயும் குறிப்பு அறிந்து செயலாற்றக் கூடியவர்களும் இருக்கின்றனர். நன்றாக விதைத்த போதிலும் முளைக்காத விதையைப் போல என்ன சொன்னாலும் உணர இயலாத மூடர்களும் இருக்கின்றர்.

**நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்**
**கொண்ட கரு அளிக்கும் கொள்கை போல் - ஒண்தொடி**
**போதம் தனம் கல்வி போன்ற வரும் காலம் அயல்**
**மாதர் மேல் வைப்பார் மனம்** **36**

நண்டு, முத்துச்சிப்பி, வாழை, மூங்கில் ஆகியவற்றில் கருவே அவற்றை அழித்துவிடும் ஒருவருடைய ஞானம், செல்வம், வித்தை அழியும் காலத்தில் பிற பெண்களை நாடிச் செல்வர்.

**வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்**
**அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பது எனக்**
**கண்ணுறுவது அல்லால் கவலைப் படேல் நெஞ்சேமெய்**
**விண் உறுவார்க்கு இல்லை விதி** **37**

பிறவியால் உண்டாகும் வினைப்பயனை வெற்றி காண்பதற்கு வேதம் முதலான நூல்களில் ஆதாரம் இல்லை முக்தி நெறியாகிய தியான சமாதிகளில் ஆழ்ந்திருப்போருக்கு நினைப்பது போல தோன்றும், விதி அவர்களைத் துன்புறுத்தாது

**நன்று என்றும் தீது என்றும் நான் என்றும் தான் என்றும்**
**அன்று என்றும் ஆம் என்றும் ஆகாதே - நின்ற நிலை**
**தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்**
**போனவா தேடும் பொருள்** **38**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லது - தீயது - நான் - அவன், இல்லை - ஆம் ஆகிய பேதங்களைக் கடப்பதேதான் அது வாழும் உண்மைப் பொருள் ஆகும். புல்லை அறுத்தவர் அதைக் கட்டுவதற்குக் கயிறைத் தேடிச் சென்றதைப் போல இறைவன் எங்கோ இருப்பதாக எண்ணி அலைவது வீணாகும்.

**முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றற்று ஒரு பொருளை**
**தப்பாமல் தன்னுள் பெறான் ஆயின் - செப்பும்**
**கலை அளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்**
**முலை அளவே ஆகுமாம் மூப்பு** **39**

முப்பது வயது அளவில் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றையும் ஒழித்து, மெய்ப்பொருளான இறைவனை அடையும் வழியை அறியாதவன் கிளிப் பிள்ளையப் போல கற்றதையே உருப்போட்டு ஒப்புவிப்பவன் போன்றவன் ஆவான்

**தேவர் குறளும் திருநான் மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனி மொழியும் : கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒரு வாசகம் என்று உணர்** **40**

திருக்குறள், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், நான்கு வேதங்களின் உபநிடதங்கள், திருமந்திரம் ஆகிய அனைத்தும் ஒரு பொருளையே உணர்த்துகின்றன என்பதை அறிந்து கொள்வாயாக.

*நல்வழி முற்றும்*

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னெறி

## கடவுள் வாழ்த்து

**மின்னெறி சடாமுடி விநாயகன் அடி தொழ**
**நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே**

**என்று முகமன் இயம்பாதவர் கண்ணும்**
**சென்று பொருள் கொடுப்பர் தீது அற்றோர் - துன்று சுவை**
**பூவின் பொலி குழலாய்! பூங்கை புகழவோ**
**நாவிற்கு உதவும் நயந்து** **01**

அழகான கைகள், நாவுக்கு ருசியான உணவுப் பொருள்களை புகழ்ச்சி கருதியா விரும்பிக் கொடுக்கின்றன. மாசற்ற மனத்திரான பெரியோர், தம்மை உபசரித்தவர்களிடத்திலே தாமே வலியச் சென்று பொருள் கொடுத்து உதவி புரிவார்.

**மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது ஏனையவர்**
**பேசுற்ற இன்சொல் பிறிது என்க - ஈசற்கு**
**நல்லோன் எறி சிலையோ நன்னுதால் ஒண்கரும்பு**
**வில்லோன் மலரோ விருப்பு** **02**

தூய உள்ளத்தினர் கூறும் கடுஞ்சொற்கள் நன்மையே தரும், கபடமானவர் கூறும் இனிய சொற்கள் துன்பம் விளைவிக்கும், இறைவன் தன் மீது பக்தியால் கல்லை எறிந்த சாக்கிய நாயனாருக்கு அருள் பாலித்தார், மலர்க்கணை எய்திய மன்மதனை எரித்தார்.

**தங்கட்கு உதவிலர் கைத்தாம் ஒன்று கொள்ளின் அவர்**
**தங்கட்கு உரியவரால் தாம் கொள்க - தங்க நெடும்**
**குன்றினால் செய்தனைய கொங்கையாய் ஆவின் பால்**
**கன்றினால் கொள்ப கறந்து** **03**

தனக்கு உதவி புரியாதவரிடத்திலிருந்து ஒரு உதவி பெற விரும்பினால் கன்றைக் காட்டி பசுவின் பாலை கறப்பது போல், அவருக்கு வேண்டியவர் எவரோ அவரைக் கொண்டு அந்த உதவியைப் பெற்று கொள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறர்க்கு உதவி செய்யார் பெரும் செல்வம் வேறு**
**பிறர்க்கு உதவியாக்குபவர் பேறாம் - பிறர்க்கு உதவி**
**செய்யாக் கருங்கடல் நீர் சென்று புயல்முகந்து**
**பொய்யாக் கொடுக்கும் பிறர்க்கு** 04

கடல்நீரை மேகம் கொண்டு சென்று மழையாகப் பொழிவது போல, பிறருக்கு உதவாதவர்களுடைய பெருஞ்செல்வத்தை, யார் எடுத்து அனுபவிக்கிறாரோ அவர் தம்முடையதாகவே பாவிப்பார்.

**நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்**
**நோக்கின் அவர் பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்**
**நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமை போல்**
**புல்லினும் திண்மை நிலை போம்** 05

நெல்லில் உமி சிறிது நீங்கி, மறுபடி இணைந்தாலும் முளைக்கும் வலிமையை இழந்து விடும். நெருங்கிய நண்பர்கள் இருவர் வேற்றுமையால் பிரிந்து, மீண்டும் கூடிய போதிலும் அந்த நட்பு முன்போல் அவ்வளவு நெருக்கமாக இருக்காது.

**காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்**
**தீதில் ஒருகருமம் செய்பவே - ஓது கலை**
**எண்ணிரண்டும் ஒன்றுமதி என் முகத்தாய் நோக்கல் தான்**
**கண் இரண்டும் ஒன்றையே காண்** 06

இரண்டு கண்களும் சேர்ந்து ஒரு பொருளைப் பார்ப்பது போல் அன்புள்ள கணவனும் மனைவியும் வேற்றுமை இன்றி, நல்ல காரியத்தையே செய்வார்கள்

**கடலே அனையம் யாம் கல்வியால் என்னும்**
**அடலேறு அனைய செருக்கு ஆழ்த்தி - விடலே**
**முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்**
**பனிக்கடலும் உண்ணப்படும்** 07

முனிவர்களிலே பெரியவரான அகத்திய முனிவர் கடலை கையால் மொண்டு குடித்துவிட்டார், நாம் கல்விக் கடல், வலிமையான ஆண் சிங்கம் என்பன போன்ற கர்வத்திலே ஆழ்ந்து விடக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் காத்துக்**
**கொள்ளும் குணமே குணம் என்க - வெள்ளம்**
**தடுத்தல் அரிதோ தடம் கரைதான் பேர்த்து**
**விடுத்தல் அரிதோ விளம்பு** **08**

வெள்ளத்தைக் கரைபோட்டுத் தடுப்பது அரியதா? அல்லது கரையை உடைத்த விடுவது அரியதா? சீறி எழுகின்ற கோபத்தை அடக்கிக் கொள்ளும் குணமே அருமையானதாகும்.

**மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்**
**வலியோர் தமைத் தாமருவில் - பலியேல்**
**கடவுள் அவிர் சடைமேல் கட்செவி அஞ்சாதே**
**படர் சிறையைப் புள் அரசைப் பார்த்து** **09**

சிவபெருமான் முடிமீது உள்ள பாம்பானது, பறவைகளுக்கெல்லாம் அரசனான கருடனைப் பார்த்துப் பயப்படுவதில்லை. வலிமை மிக்கவரிடம் சேர்ந்து கொண்டால் பலம் பொருந்திய பகைவனைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை.

**தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்**
**வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் - திங்கள்**
**கறையிருளை நீக்கக் கருதாது உலகில்**
**நிறை இருளை நீக்கும் மேல் நின்று** **10**

சந்திரன் தன்னுடைய களங்கத்தை நீங்கிக் கொள்ள நினையாமல் வானத்திலே நின்று உலகின் இருளை போக்குவது போல், மேன்மை மிக்கவர் தன் துன்பத்தைப் பெரிதாகக் கருதாமல் பிறருக்கு நேரிட்ட துன்பத்தை நீக்குவார்.

**பொய்ப் புலன்கண் ஐந்து நோய் புல்லியர் பால் அன்றியே**
**மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் - துப்பின்**
**சுழற்றும் கொல் கல்தூணைச் சூறாவளி போய்**
**சுழற்றும் சிறுபுன் துரும்பு** **11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு துரும்பைச் சூறாவளிக் காற்று சுழலச் செய்யும், தன் வலிமையால் கல்தூணைச் சுழற்றுமோ? பொய்யான புலன்கள் ஐந்தும் எளியவர்களை துன்புறுத்தும், மெய்யறிவுடையோரை ஒன்றும் செய்யமாட்டா

**வருந்தும் உயிர் ஒப்பான் வாயில் உடம்பில்**
**பொருத்துதல் தானே புதுமை - திருந்திழாய்**
**சீதநீர் பொள்ளல் சிறு குடத்து நில்லாது**
**வீதலோ? நிற்றல் வியப்பு** **12**

ஓட்டையுள்ள குடத்தில் நீர் நிற்காததும் ஆச்சரியம், நிற்பதும் ஆச்சரியம், ஒன்பது துவாரங்களையுடைய இந்த உடம்பிலிருந்து வருந்தும் உயிரானது ஓடாமல் இருக்கின்றதே அதுவே ஆச்சரியம் அல்லவா?

**பெருக்க மொடு சுருக்கம் பெற்ற பொருட்டு ஏற்ப**
**விருப்பமொடு கொடுப்பர் மேலோர் - சுரக்கும்**
**மலையளவு நின்ற முலைமாதே மதியின்**
**கலையளவு நின்ற கதிர்** **13**

சந்திரனது ஒளியானது வளர்வதையும் தேய்வதையும் பொறுத்து இருப்பது போல், மேலோர் தம்முடைய செல்வ நிலையின் ஏற்ற இறக்கத்தை அனுசரித்து அன்போடு வழங்குவர்

**தொலையாப் பெரும் செல்வத் தோற்றத்தோம் என்று**
**தலையாயவர் செருக்குச் சார்தல் இலையால்**
**இரைக்கும் வண்டு ஊதும் மலர் ஈர்ங்கோதாய் மேரு**
**வரைக்கும் வந்தன்று வளைவு** **14**

மகாமேரு மலைக்குக் கூட ஒரு சமயம் வளைவு வந்தது, அழியாத பெருஞ்செல்வத்தைப் பெற்றிருக்கிறோம் என்னும் கர்வம் அறிவுடையோர்களிடம் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல்லானுக்கு அன்பு இங்குஇடம் பொருள் ஏவல் மற்று**
**எல்லாம் இருந்தும் அவற்கு என் செய்யும் நல்லாய்**
**மொழியிலார்க்கு ஏதுமுது நூல் தெரியும்**
**விழியிலார்க்கு ஏது விளக்கு** 15

ஊமைக்கு நூல்களும், குருடனுக்கு விளக்கும் எதற்கு? அன்பு இல்லாதவனுக்கு இடம் பொருள் ஏவல் முதலான வசதிகள் இருந்தும் அதனால் என்ன பயனை அடைந்தான்?

**தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்து உயர்ந்தோர்**
**தம்மை மதியார் தமை அடைந்தோர் - தம்மின்**
**இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு**
**கழியினும் செல்லாதோ கடல்** 16

கடலானது தன்னை அடுத்துள்ள உப்பங்கழியிலும் சென்று பாய்வது போல், மேன்மையானவர்கள் தம்மைச் சார்ந்தவர்கள் தாழ்ந்து இருப்பினும், தங்களைப் பெரிதாகக் கருதாமல், அவர்கள் இருக்குமிடம் சென்று அவர்களுடைய துன்பத்தை நீக்குவார்கள்.

**எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்றவன்**
**மைந்தர் தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீ**
**நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ்**
**கன்றும் உதவும் கனி** 17

தங்களை தந்தை யாசிப்பவர்களுக்கெல்லாம் கொடுத்தும் வறுமை அடைந்தார் என்று எண்ணி, அவருடைய புதல்வர்கள் கொடாமல் இருப்பார்களா? இலையும் காயும் கொடுத்து அழிந்த வாழையின் கீழே தோன்றிய கன்றும் மரமாகி, காயும் இலையும் கொடுத்து உதவுகிறது.

**இன்சொலால் அன்றி இருநீர் - வியன் உலகம்**
**வன்சொலால் என்றும் மகிழாதே - பொன்செய்**
**அதிர் வளையாய்! பொங்காது அழல் கதிரால் தண்ணென்**
**கதிர் வரவால் பொங்கும் கடல்** 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பம் மிகுந்த சூரியன் வருகையினால் கடல் பொங்காது, குளிர்ந்த சந்திரன் வருகையினால் கடல் பொங்கும், கனிவான சொற்களால் மகிழ்வார்கள், சுடு சொற்களால் யாரும் மகிழ்வதில்லை

**நல்லோர் வரவால் நகைமுகங் கொண்டு இன்புறீஇ**
**அல்லோர் வரவான் அழுங் குவர் - வல்லோர்**
**திருந்தும் தளிர் காட்டி தென்றல் வரத் தேமா**
**வருந்தும் சுழற்கால் வர** 19

தென்றல் வீசத் தொடங்கியதும் மாமரம் தளிர் விட்டுச் செழிப்படையும் சுழல் காற்று வீசுகையில் துன்புறும், நற்குணம் உள்ளவர் வருகையால் கல்வியில் வல்லவர் முகமலர்ந்து இன்புறுவார், தீயவர் வருகையால் மனம் வெதும்புவார்.

**பெரியவர் தம் நோய் போல் பிறர் நோய் கண்டு உள்ளம்**
**எரியின் இழுது ஆவர் என்க - தெரி இழாய்**
**மண்டு பிணியால் வருந்தும் பிற உறுப்பைக்**
**கண்டு கலுழுமே கண்** 20

முற்றிய நோயினால் வேதனையுறும் பிற அங்கங்களைப் பார்த்துக் கண்ணானது கலங்குவது போல, உயர் குணத்தோர், மற்றவர்களுடைய நோயை கண்டு தமக்கு வந்த நோய் போல எண்ணி நெருப்பில் இட்ட நெய் போல உருகுவார்.

**எழுத்து அறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்**
**எழுத்து அறிவார் காணின் இலையாம் - எழுத்து அறிவார்**
**ஆயும் கடவுள் அவிர் சடைமுன் கண்ட அளவில்**
**வீயும் சுரநீர் மிகை** 21

சிவபெருமானின் சடாமுடியைக் கண்டதும் ஆகாய கங்கையின் பெருக்கு அடங்கிவிடுவது போல எழுத்தின் உண்மைப் பொருளை உணராதவர்களின் கல்வி அறிவானது உண்மைப் பொருளை அறிந்தவர் முன் ஒன்றும் இல்லாமல் போய்விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்**
**மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க - நீக்கு**
**பவர் யார்? அரவின் பருமணி கண்டு என்று**
**கவரார் கடலின் கடு** 22

நல்ல பாம்பினிடம் உள்ள நாகரத்தினத்தை எடுப்பவர் யார்? பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தைக் கொள்பவர் எவர்? பிறப்பின் காரணமான உயர்வு தாழ்வு கூறாமல் அறிவால் மிக்கவரே உயர்ந்தவர் எனக் கொள்வீர்களாக.

**பகர்ச்சி மடவார் பயில நோன்பு ஆற்றல்**
**திகழ்ச்சி தரு நெஞ்சத் திட்பம் - நெகிழ்ச்சி**
**பெறும் பூரிக்கின்ற முலைப் பேதாய்! பல்கால்**
**எறும்பு ஊரக் கல் குழியுமே** 23

எறும்புகள் ஊர்வதனால் கல் தேய்வது போல், பெண்களுடன் ஆண்கள் பேசிப்பழகி வந்தாலும் கூட தவத்தினால் பெற்ற மன உறுதியானது நாளடைவில் தளர்ந்து விடும்.

**உண்டு குணம் இங்கு ஒருவர்க்கு எனினும் கீழ்**
**கொண்டு புகல்வது அவர் குற்றமே - வண்டு மலர்ச்**
**சேர்க்கை விரும்பும் செழும் பொழில்வாய் வேம்பு அன்றோ**
**காக்கை விரும்பும் கனி** 24

செழிப்பான சோலையிலே வண்டுகள் மலர்ப்படுக்கையை விரும்பிச் செல்லும் காக்கையோ வேப்பம் பழத்தைத் தேடி ஓடுவது போல, ஒருவரிடம் நற்குணங்கள் இருந்த போதிலும் அற்பர்கள் குற்றங்களையே எடுத்துக்கூறிக் கொண்டிருப்பார்கள்.

**கல்லா அறிவிற் கயவர்பால் கற்று உணர்ந்த**
**நல்லார் தமது கனம் நண்ணாரே - வில்லார்**
**கணையிற் பொலியும் கருங்கண்ணாய்! நொய்தாம்**
**புனையில் புகும் ஒண் பொருள்** 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெப்பத்திலே வைக்கப்பட்ட கனமான பொருளும் எளிதாவது போல், கற்றறிந்த நல்லவர் கயவரிடத்திலே சேர்ந்தால் தம்முடைய அறிவையும் குணத்தையும் இழந்து விடுவார்.

**உடலின் சிறுமை கண்டு ஒண் புலவர் கல்விக்**
**கடலின் பெருமை கடவார் - மடவரால்**
**கண் அளவாய் நின்றதோ காணும் கதிர் ஒளிதான்**
**விண் அளவாயிற்றோ விளம்பு 26**

சூரிய ஒளியானது பார்க்கின்ற கண் அளவில் நிற்கின்றதா? வான அளவில் விரிந்து நிற்கின்றதா? உடலின் சிறுமையைக் கண்டு ஒருவருடைய அறிவாற்றலின் பெருமையை அலட்சியம் செய்யக்கூடாது.

**கைம்மாறும் உகவாமல் கற்று அறிந்தோர் மெய் வருந்திக்**
**தம்மால் இயல் உதவி தாம் செய்வார் - அம்மா**
**முளைக்கும் எயிறு முதிர் சுவை நாவிற்கு**
**விளைக்கும் வலியன தாம் மென்று 27**

கடினமான தின்பண்டங்களை பற்கள் மென்று நாவுக்கு சுவை அளிப்பது போல, கற்றறிவாளர் பிரதிப் பிரயோசனம் கருதாமல் உடல் வருந்தி இயன்ற உதவியைச் செய்வர்

**முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளம்**
**கனிவினும் நல்கார் கயவர் - நனிவிளைவில்**
**காயினும் ஆகும் கதலிதான் எட்டி பழுத்து**
**ஆயினும் ஆமோ அறை 28**

முதிர்ந்த அறிவுடையோர் கோபமுற்ற போதிலும் கொடுத்து உதவுவார், கயவர் களிப்போடு பேசினும் கொடுக்கமாட்டார், பழுக்காத காயானாலும் வாழை உணவுக்குப் பயன்படும், எட்டிப் பழுத்து என்ன பயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடற்கு வரும் இடர் நெஞ்சு ஓங்குபரத்து உற்றோர்**
**அடுக்கும் ஒரு கோடியாக - நடுக்கமுறார்**
**பண்ணிற் புகழும் பனிமொழியாய் அஞ்சுமோ**
**மண்ணிற் புலியை மதிமான் 29**

வானத்துச் சந்திரனிடம் உள்ள மான், பூமியில் உள்ள புலியைக் கண்டு பயப்படாதது போல், பரம் பொருளிடத்தே மனத்தைச் செலுத்திய ஞானியரின் உடலுக்கு ஒரு கோடி துன்பங்கள் வந்தாலும் கலங்கமாட்டார்.

**கொள்ளும் கொடும் கூற்றம் கொள்வான் குறுகுதன்முன்**
**உள்ளங்கனிந்து அறம் செய்து உய்கவே - வெள்ளம்!**
**வருவதற்கு முன்னர் அணை கோலி வையார்**
**பெருகுதற் கண் என் செய்யவார் பேசு 30**

எமன் வந்து உயிரைக் கொண்டு செல்லுமுன்னே மனம் உவந்து, தர்மம் செய்து உய்வீர்களாக! வெள்ளம் வருவதற்கு முன்னே அணை போடதாவர், வந்தபின் என்ன செய்வார்?

**பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே**
**வீரமொடு காக்க விரைகுவார் - நேரிழாய்!**
**மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன் மேல்**
**கை சென்று தாங்கும் கடிது 31**

உடலின் மேல் படும் கொம்பின் அடியை, கை தடுத்து தான் ஏற்றுக் கொள்வது போல், பிறரை வருத்தும் துன்பங்களை, பேரறிஞர்கள் தைரியத்தோடு சென்று காத்திடுவார்கள்.

**பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்**
**மன்னும் அறங்கள் வலியிலவே - நன்னுதால்!**
**காழ் ஒன்று உயர் திண் கதவு வலியுடைத்தோ**
**தாழ் ஒன்று இலதாயின் தான் 32**

வயிரம் பொருந்திய உறுதியான கதவுக்கு தாழ்ப்பாள் இல்லாவிடில் உறுதி இல்லாதது போல், நீதி நூல்களின் பயனை தேர்ந்து அறியும் ஆற்றல் இல்லாதவர்கள் செய்யும் தருமங்கள் பயன் தராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எள்ளாது இரப்ப இழிஞர் போற்றற்கு உரியர்**
**விள்ளா அறிஞர் அது வேண்டாரே - தள்ளாக்**
**கரை காப்பு உளது நீர் கட்டு குளம் அன்றிக்**
**கரை காப்பு உளதோ கடல்** **33**

சிறிய குளத்துக்குக் கரை காப்பாக உள்ளது, பெரிய கடலுக்கு அவ்வாறு இல்லை பிறர் இகழாமல் காத்துக் கொள்வது இழிவானவர்களுக்கே உரியது, அறிவுடையோர்க்கு அது தேவை இல்லை

**அறிவுடையார் அன்றி அது பெறார் தம்பால்**
**செறி பழியை அஞ்சார் சிறிதும் - பிறைநுதால்**
**வண்ணம் செய்வாள் விழியே அன்றி மறை குருட்டுக்**
**கண் அஞ்சுமோ இருளைக் கண்டு** **34**

ஒளியுடைய விழிகள் இருளைக் கண்டு பயப்படும், குருட்டுக்கண் பயப்படாது, அறிவுடையோர் தமக்கு வரும் பழிச் சொல்லைகண்டு அஞ்சுவர், அறிவற்றவர் அஞ்சமாட்டார்.

**கற்ற அறிவினரைக் காமுறுவார் மேன் மக்கள்**
**மற்றையர் தாம் என்றும் மதியாரே - வெற்றி நெடும்**
**வேல் வேண்டும் வாள் விழியாய்! வேண்டா புளிங்காடி**
**பால் வேண்டும் வாழைப்பழம்** **35**

வாழைப்பழத்தை பால் விரும்பும், புளிப்பான காடியை விரும்புமோ? கற்றறிந்தோரை மேலோர் விரும்புவர், கீழோர் எப்பொழுதும் மதிக்கமாட்டார்

**தக்கார்க்கோவர் தகார்க்கு அளிப்பார் இல் என்று**
**மிக்கார்க்கு உதவார் விழுமியோர் - எக்காலும்**
**நெல்லுக்கு இறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி**
**புல்லுக்கு இறைப்பாரோ போய்** **36**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்பயிருக்கே எப்பொழுதும் நீரை இறைப்பர்,. புல்லுக்கு இறைப்பாரோ? தகுதியுடையோருக்கே பெரியோர் கொடுப்பார்,. தகுதியற்றோர்க்கு கொடுக்க மாட்டார்.

**பெரியோர் முன் தன்னைப் புகழ்ந்து உரைத்த பேதை**
**தரியாது உயர்வு அகன்று தாழும் - தெரியாய் சொல்**
**பொன் உயர்வு தீர்த்த புணர் முலையாய்! விந்தமலை**
**தன் உயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து** **37**

அகத்திய முனிவர் முன்னே தற்பெருமை பேசி விந்திய மலையானது தாழ்ந்ததை அறியாயோ? பெரியவர்கள் முன்னிலையில் தற்பெருமை பேசி மூடன் தாழ்வு அடைவான்.

**நல்லார் செய்யும் கேண்மை நாள்தோறும் நன்றாகும்**
**அல்லார் செய்யும் கேண்மை ஆகாதே - நல்லாய் கேள்**
**காய் முற்றின் தின்தீங் கனியாம் இளம் தளிர் தாள்**
**போய் முற்றின் என் ஆகிப் போம்** **38**

காய் முற்றினால் சுவையுடைய பழம் ஆகும். இளம் தளிர் முற்றினால் என்ன பயன்? நல்லவருடைய நட்பானது நாள்தோறும் நன்மை ஆகும். பொல்லாதவருடைய நட்பானது அவ்வாறு ஆகாது.

**கற்று அறியார் செய்யும் கடுநட்பும் தாங்கூடி**
**உற்றுழியும் தீமை நிகழ்வு உள்ளதே - பொற்றொடீ**
**சென்று படர்ந்த செழுங்கொடி மென் பூ மலர்ந்த**
**அன்றே மனமுடைய தாம்** **39**

பூவானது மலர்ந்தே அன்றே மணம் தந்து பின் கெடுவது போல கல்வி அறிவு இல்லாதவருடன் கொள்ளும் நெருங்கிய நட்பானது நெடுங்காலம் சேர்ந்திருந்த போதிலும் தீமை அளிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொன் அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி**
**மன்னும் அறிஞரைத் தாம் மற்று ஒவ்வார் : மின்னுமணி**
**பூணும் பிற உறுப்புப் பொன்னே அது புனையாக்**
**காணும் கண் ஒக்குமோ காண்** 40

ஒளி தரும் தங்க ஆபரணங்களை அணியும் அவயங்கள், அவற்றை அணியாத விழிகளுக்கு ஒப்பாகுமா? ஆபரணங்களால் அலங்கரித்துக் கொள்ளும் மன்னர் ஆபரணம் எதுவும் அணியாத அறிஞர்க்கு ஒப்பாக மாட்டார்

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்பயன்

திருவருட்பயன் என்பது திருவருளின் பயனை விளக்கும் நூல் என விரியும். இந்நூலில் முதல் ஐந்து அதிகாரம் திருவருளைப் பற்றியும், மற்றைய ஐந்து அதிகாரம் திருவருளின் பயனைப் பற்றியும் கூறுவன. முதல் ஐந்தும் முறையே திருவளைக் கொடுக்கும் பதியின் தன்மையையும், திருவருளைப் பெறும் உயிரின் தன்மையும், திருவருளால் நீக்கப்படும் மலத்தின் தன்மையையும் திருவருளின் தன்மையும், பேரருளின் வடிவாகிய குருவின் தன்மையையும் விளக்கும், பின்னைந்தும் முறையே ஆன்மாவானது பேரருளாற் பேரறிவைப் பெறும் முறைமையையும், அதனால் மலத்தினின்று நீங்கும் முறைமையையும் அதனாற் பேரானந்தத்தைப் பெறும் முறைமையையும், பேரானந்தம் பெற்றோர் சீவன்முத்தராயின் அவரது வாசனா மலத்தைக் கெடுக்கும் ஐந்தெழுத்தோதும் முறைமையையும், சீவன் முத்தரது தன்மையையும் கூறுவன.

காப்பு

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்**
**கற்குஞ் சரக்கன்று காண்.**

பதவுரை : நற்குஞ்சரம் ~ நல்லருளைப் பொழிவதும் யானை முகத்தைப் போன்றதுமான பிரணவத் திருமுகத்தையுடையவரும், கன்று ~ எப்போதும் இளைமையுள்ளவருமாகிய விநாயகக் கடவுளை, நண்ணில் ~ (ஒருவர் மனத்தினாலும் சொல்லினாலும் உடம்பினாலும்) வழிபடுவாராயின் (அவருக்கு) கலைஞானம் ~ ஞானசாத்திரம், கற்கும் சரக்கு அன்று ~ வருத்திக் கற்க வேண்டிய பண்டம் அன்று, ஆதலால் அவருடைய திருவடியை வழிபடும் அடியேன் செய்யும் ஞான நூல் எவ்வகையாலும் தவறின்றி இனிது முடிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்**
**நிகரிலிறை நிற்கும் நிறைந்து**

**பதவுரை :** அகர உயிர்போல் - அ என்னும் ஒலியானது மற்றைய எழுத்துக்களுக்கு முதலாய், அவற்றில் வேறறக் கலந்திருப்பது போல, நிகரில் இறை - ஒப்பற்றவராகிய முதல்வர், எங்கும் நிறைந்து - (அறிவுள்ளனவும் அறிவில்லாதனவுமாகிய பொருள்கள்) எல்லாவற்றிலும் வேறறக் கலந்து, அறிவாகி - அறிவே வடிவமாகி, நிற்கும் - தொடக்கமும் முடிவுமின்றி நிற்பர்.

**தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி**
**பின்னமிலா னெங்கள் பிரான்**

**பதவுரை :** தன் நிலைமை - (மனவாக்குக் கெட்டாததும் மலபந்த மில்லாததும் பேரானந்தமானதும் ஆகிய) தமது ஒப்பற்ற நிலையை, மன் உயிர்கள் - நிலைபெற்ற ஆன்மாக்கள் யாவும், சாரத் தருஞ்சத்தி பின்னம் இலான் - பொருந்தும் படி அருளுகின்ற சத்தியின் வேறாகாதவர், எங்கள் பிரான் - எமது இறைவராகிய சிவபெருமான்.

**பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்**
**அருமைக்கு மொப்பின்மை யான்**

**பதவுரை :** பெருமைக்கும் - (சிவபெருமானானவர்) நிறைவினாலும், நுண்மைக்கும் - அறிதற்கருமையினாலும், பேர் - அருட்கும் - மிகுந்த அருளினாலும், பேற்றின் அருமைக்கும் ஒருவராற் பெறுதற்கருமையினாலும், ஒப்பின்மையான் தமக்கு ஒப்பில்லாதவர்

**ஆக்கி யெவையும் அளித்தா சுடனடங்கப்**
**போக்குமவன் போகாப் புகல்**

**பதவுரை :** எவையும் ஆக்கிஉயிர்களெல்லாவற்றையும் தோற்றுவித்து, அளித் - காத்து, மறைத்து, ஆசுடன் அடங்கப் போக்கும் - (சர்வ சங்காரத்தில் ஆன்மா) ஆணவ மலத்தோடு கேவலமாய் நிற்க ஒடுக்கும், ஆணவ மலத்தோடு மற்றை மலங்களையும் ஒருங்கே போக்கி அருளைலைச் செய்யும், அவன் - கடவுள், போகாப்புகல் - எக்காலத்தும் உயிர்களுக்கு நீங்காத ஆதாரமாயுள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்**
**உருவு முடையா னுளன்**

**பதவுரை :** அருவும் - சிவம் சத்தி நாதம் விந்து ஆகிய நான்கு அருவத் திருமேனிகளும், உருவும் - மகேந்திரன் உருத்திரன் மால் அயன் ஆகிய நான்கு உருவத் திருமேனிகளும், அருவும் உருவும் - சதாசிவனென்னும் அருவுருவத் திருமேனியும், அறிஞர்க்கு - ஞானமார்க்கத்தாருக்குரிய, அறிவாம் உருவும் - ஞானவடிவமும், உடையான் - எமது தலைவராகிய சிவபெருமான், உளன் - உடையவர்.

**பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவ**
**னில்லாதா னெங்க ளிறை**

**பதவுரை :** பல் ஆர் உயிர் - அளவில்லாதனவாய் எங்கும் நிறைந்திருக்கும் ஆன்மாக்கள், உணரும் பான்மையென (அவற்றிற்குத் தலைவராகிய கடவுள், அருளிய உட்கருவி புறக் கருவிகளைக் கொண்டு) அறியுந் தன்மைபோல மேலொருவன் இல்லாதான் - தமக்கு (கருவிகளைக் கொடுத்தற்கு ஒரு தலைவனில்லாதவர் எங்கள் இறை - எமது பதியாகிய சிவபெருமான்.

**ஆனா அறிவா யகலா னடியவர்க்கு**
**வானாடர் காணாத மன்**

**பதவுரை :** வானாடர் காணாதமன் (நிறைந்த இன்பத்தை அனுபவிப்பதற்கு வேண்டிய பசு நல்வினை செய்தவர்களாயினும் பேரன்பில்லாதவர்களாதலால்) தேவர்களுங் காணாத சிவபெருமான், ஆனா அறிவாய் - எவ்விடத்தும் நிறைந்து நீங்காத ஞானமாய், அடியவர்க்கு - அவருடைய அடியார்களுக்கு, அகலான் - மறையாமல் வெளியாக நின்று பேரின்பத்தைக் கொடுப்பார்.

**எங்கு மெவையு மேரியுறுநீர் போலேகந்**
**தங்குமவன் றானே தனி**

**பதவுரை :** அவன் - சிவபெருமான், எங்கும் - எல்லா உலகங்களிலும், எவையும்- எல்லா உயிர்களிலும், எரி உறு நீர் போல் - சூடு பொருந்திய நீர்போல், ஏகம் தங்கும் - வேறற நிற்பர், தானே - (அவைகளோடு சேர்ந்து நின்றும்) அவற்றின் தன்மை சாராமல், தனி - அவற்றைக் கடந்து நிற்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நலமிலன் ருண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர்சங் கரன்**

**பதவுரை :** நண்ணார்க்கு நலமிலன் - தம்மை யடைந்து வழிபடாதவருக்குத் தமது பேரின்பத்தைக் கொடாதவர், நண்ணினர்க்கு நல்லன் - அன்போடு வழிபடுபவருக்கு முத்தியின்பத்தைக் கொடுப்பவர், சலமிலன் - வழிபடாமையினால் வெறுப்பேனும் வழிபடுதலால் விருப்பேனும் இல்லாதவர், பேர் சங்கரன் - (சர்வான்மாக்களுக்குஞ் சுகத்தையே செய்பவராதலாற்) சங்கரன் என்னுந் திருநாமத்தையுடையவர்.

**உன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது**
**மன்னுபவந் தீரக்கு மருந்து**

**பதவுரை :** உணர்வாய் - ஞானமாய் நின்று, மன்னுபவம் - அநாதியாயன பிறவிக்குக் காரணமாகிய ஆணவமென்னும் வியாதியை, தீர்க்கும் மருந்து - (திருவருளென்னும் மருந்தை ஊட்டித்) தீர்க்கும் வைத்தியநாதராகிய சிவபெருமானை, ஓவாது உன்னும் - இடையறாமல் அன்போடு நினைத்து வழிபடுங்கள், உளது - இதனால் வரும் முத்தியின்பமே நிலையான செல்வம், ஐயம் இலது - அவரை அன்போடு வழிபட்டால் அந்த முத்தியின்பத்தை விரைவில் அடைதற்குச் சந்தேகமில்லை.

## இரண்டாம் அதிகாரம் - உயிரவைநிலை

**பிறந்தநாள் மேலும் பிறக்குநாள் போலுந்**
**துறந்தோர் துறப்போர் தொகை**

**பதவுரை :** துறந்தோர் தொகை - ஆன்மாக்களுள் முத்தியடைந்தோர் தொகை, பிறந்தநாள் போலும் - அவ்வான்மாக்கள் பல பிறவிகளிற் பிறந்து வாழ்ந்த நாள்களின் தொகைக்குச் சமமாகும். துறப்போர் தொகை - முத்தியடையாமல் இருக்கும் ஆன்மாக்களின் தொகை, மேலும் பிறக்கும் நாள் போலும் - அவ்வான்மாகக்ள் முன்னர்ப் பிறந்து வாழ்ந்த நாள்களுடன் இனிப் பல பிறவிகளிற் பிறந்து வாழும் நாள்களுஞ் சேர்ந்த தொகைக்குச் சமமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார் களன்றி**
**யொருமலத்தா ராயு முளர்**

**பதவுரை :** திரிமலத்தார் –ஆணவம் கன்மம் மாயையென்னும் மும்மலத்தையுடைய சகலர் எனவும், அதனில் ஒன்று சென்றார்கள் – மும்மலங்களில் ஒன்றாகிய மாயை நீங்கி ஆணவம் கர்மம் என்னும் இரு மலங்களையுடைய பிரளயாகலரெனவும், அன்றி – இவர்கள் தவிர, ஒரு மலத்தாராயும் மாயையுங் கன்மமுமின்றி ஆணவமாகிய ஒரு மலமுடைய விஞ்ஞான கலர் எனவும், உளர் – மூவகையாய ஆன்மாக்கள் உண்டு.

**மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்கள்**
**தோன்றலர்தொத் துள்ளார் துணை**

**பதவுரை :** மூன்று திறத்து உள்ளாரும் – அம்மூவகையான்மாக்களும், மூலமலத்துள்ளார்கள் – அநாதியே ஆணவ மல சம்பந்தர்களாய் இருக்கிறவர்கள், துணையுள்ளார் – பிரகிருதி மாயை என்னுந் துணையினையுடைய சகலர், தொத்துத் தோன்றலர் – மலத்தினாற் பிணிக்கப்பட்டிருக்கும் தமது நிலையை அறியாதவர்.

**கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்**
**திண்டிறலுக் கென்னோ செயல்**

**பதவுரை :** நாளும் கண்டவற்றை – நனவிலே நாள் தோறுங் கண்ட பொருள்களை, கனவிற் கலங்கியிடும் கனவிலே மாறிக் காண்கின்ற, திண் திறலுக்கு – வலியற்ற ஆன்மாக்களுக்கு, செயல் என்னோ – தம் செயலாவது யாது? (சுதந்திரச் செயலும் வலியும் இல்லை என்றபடி)

**பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்(கு)**
**அறிவென்ற பேர்நன் றற**

**பதவுரை :** பொறியின்றி – ஐம்பொறிகளில் ஏதாயினு மொன்றில்லாமல், ஒன்றும் புணராத புந்திக்கு – ஒரு விஷயத்தையும் அறியமாட்டாத ஆன்மாவுக்கு, அறிவு என்ற பேர் – அறிவு (சித்தி) என்றுரைத்த பெயர், அற நன்று – பிழையானதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒளியு மிருளு முலகு மலர்கட்**
**டெளிவில் எனில்என் செய்**

**பதவுரை :** ஒளியும் – சூரியன் நெருப்பு முதலிய சுடர்களும், இருளும் – மயக்கத்தைத் தருவதாகிய இருளும், உலகும் – (பலவகைப்பட் பொருள்களோடு சிறந்து நிற்கும்) உலகமும் அலர் கண் தெளிவு இல் எனில் – விழித்திருக்குங் கண்ணிற்குக் காணுந் தன்மை இல்லையாயின், என் செய – என்ன பயனை உடையன?

**சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை**
**உற்றசத சத்தா முயிர்**

**பதவுரை :** சத்து அசத்தைச் சாராது நிலைபெற்ற ஞானமாகிய சிவம் நிலையற்றனவாகிய மாயைப் பொருள்களைப் புதிதாகச் சுட்டியறிய வேண்டுவதில்லை (அவர் என்று மறிய வராதலால்) அசத்து அறியாது – சடப்பொருள்கள் ஒன்றையுமறியமாட்டா, அங்கண்அப்படியிருத்தலால், இவை உற்றசிவத்தையும் சடப்பொருள்களையும் அறிவன, சதசத்தாம் உயிர் – சத்தாகாமலும் அசத்தாகாமலும் சதசத்தாயிருக்கும் ஆன்மாக்களாம்.

**இருளில் இருளாகி யெல்லிடத்தில் எல்லாம்**
**பொருள்க ளிலதோ புவி**

**பதவுரை :** இருளில் இருளாகி – இருள் வந்தகாலத்து இருள்மயமாகியும், எல் இடத்தில் எல் ஆம் பொருள்கள் – ஒளி வந்தபோது ஒளிமயமாகியும் நிற்கும் பொருள்களை, புவி இலதோ – பூமி உடையதன்றோ? (அப்படியான பொருள்கள் பூமியிலுண்டு, அவை படிகம் முதலியன ஆன்மா இப்படியான பொருள்களைப் போல்வது.

**ஊமன்கண் போல வொளியு மிகவிருளே**
**ஆ (ம்) மன்கண் காணா தவை**

**பதவுரை :** ஊமன்கண் போல – கூகையின் கண்ணுக்குச் சூரியனது ஒளி தோன்றாமலிருப்பது போல, மன்கண் காணாதவை – சிவபெருமான் அருள்கின்ற ஞானத்தைக் கொண்டு காணாத ஆன்மாக்களுக்கு, ஒளியும் மிக இருளே ஆம் – சிவமாகிய ஒளி தோன்றாமல் நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்றளவும் ஆற்றுமுயி ரந்தோ அருள்தெரிவ(து)**
**என்றளவொன் றில்லா இடர்**

**பதவுரை :** அன்று அளவும் – அநாதியாகவே, அளவொன்று இல்லா இடர் – (பிறந்திறந்து) அளவில்லாத துன்பங்களை, ஆற்றும் உயிர் – தாங்கி நிற்கும் உயிர்கள், அந்தோ – ஐயோ! அருள் தெரிவது என்று – (ஆணவம் நீங்கத் திருவருளாகிய ஞானத்தைப் பெற்றுப் பேரின்பத்தையடைவது எக்காலம்.

## மூன்றாம் அதிகாரம் - இருண்மல நிலை

**துன்றும் பவத்துயருமின்புந் துணைப்பொருளும்**
**இன்றென்ப தெவ்வாறு மில்**

**பதவுரை :** துன்றும் பவத்துயரும் – நெருங்கிய பிறவித் துன்பமும், இன்பும் – முத்தியாகிய பேரின்பமும் துணைப் பொருளும் – பிறவித் துன்பத்துக்குக் காரணமாகிய மும்மலங்களும் முத்திக்கு காரணமாகிய சிவமும், இன்று என்பது – இல்லாத பொருள்கள் என்று சொல்லுவது எவ்வாறு இல் – சுருதி யுத்தி அனுபவம் என்னும் அளவைகளுள் எவ்வாற்றாலுமில்லை.

**இருளான தன்றி யிலதெவையு மேகப்**
**பொருளாகி நிற்கும் பொருள்**

**பதவுரை :** எவையும்– உலகத்திலேயுள்ள பலவகைப்பட்ட பொருள்களும் ஏகப் பொருளாகி நிற்கும் பொருள் (அவற்றின் தன்மை தோன்றாமல் ஒரே பொருளாகத் தோன்றச் செய்யும் பொருள், இருளானதன்றி இலது – இருளுருவால் பொருள்ளன்றி வேறு பொருள் இல்லை.

**ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டும்**
**இருபொருளுங் காட்டா திது**

**பதவுரை :** இருள் – இருளானது, ஒரு பொருளும் காட்டாது – மற்றைய பொருள்களைக் காட்டாது (ஆயினும்), உருவங் காட்டும் – தன்னுடைய உருவத்தைக் காட்டும், இது இந்த ஆணவமானது, இரு பொருளுங் காட்டாது – பிற பொருள்களையும் தன்னையும் மறைக்கின்றது. (ஆதலால் இது இருளினுங் கொடியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி**
**இன்றளவும் நின்ற திருவருள்**

**பதவுரை :** அன்று அளவி - அநாதியே ஆன்மாவோடுள்ளதாய், உள் ஒளியோடு ஆவியிடை அடங்கி - அவ்வான்மாவுக்குப் பிராணனாகிய சிவமும் அதனோடு நிற்க அந்தச் சிவத்தைச் சாராது ஆன்மாவைச் சார்ந்து, இருள் - ஆணவமானது இன்றளவும் - இன்றுவரைக்கும், நின்றது - நீங்காது நின்றது.

**பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றுங்**
**கணவர்க்குந் தோன்றாத கற்பு**

**பதவுரை :** பலரைப் புணர்ந்தும் - எண்ணில்லாத ஆன்மாக்களைப் பொருந்திக் கலந்து நின்றும், இருட்பாவைக்கு - ஆணவமாகிய பெண்ணுக்கு, கணவர்க்கும் என்றுந் தோன்றாத கற்பு உண்டு - தனது நாயகராகிய ஆன்மாக்களுக்கும் எக்காலமும் தன்னைக் காட்டமலிருக்கும் நியமமுண்டு.

**பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத**
**தன்மையிரு ளார்தந் தது**

**பதவுரை :** பன்மொழிகள் என் - வேறு பல காரணங்களைப் பேசிப் பயனென்ன, உணரும் பான்மை தெரியாத தன்மை (ஆன்மா உண்மைகளை) அறியாமல் நிற்கும் மயக்கம், இருளார் தந்தது - ஆணவம் தந்த மயக்கமாம்.

**இருளின்றேற் றுன்பே னுயிரியல்பேற் போக்கும்**
**பொருளுண்டே லொன்றாகப் போம்**

**பதவுரை :** இருள் இன்றேல் - ஆணவம் என்ற பொருள் இல்லையாயின், துன்பு ஏன் - ஆன்மாவுக்குப் பிறவித்துன்பமிராது, உயிரியல்பேல் - இந்த ஆணவம் ஆன்மாவின் குணமாயின், போக்கும் பொருள் உண்டேல்- ஆணவத்தைக் கெடுக்கத்தக்க பொருளொன்று உளதாயின், ஒன்றாகப் போம் - (அப்பொருள் ஆணவத்தைக் கெடுக்கும்போது) அக்குணத்தையுடைய பொருளாகிய ஆன்மாவும் ஒருங்கே கெட்டுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசாதி யேலணைவ காரணமென் முத்திநிலை**
**பேசா தகவும் பிணி**

**பதவுரை :** ஆசு ஆதியேல் - ஆணவமானது ஆன்மாவை இடையிற் சேர்ந்ததாயின் அணைவ காரணம் என் - அது அதைச் சேர்தற்கு இடையிலுண்டான காரணமென்ன (அன்றியும்), முத்திநிலை (ஆன்மா துயதாயிருக்கும்) முத்திநிலையிலும், பிணி பேசாது அகவும் - ஆணவம் ஒரு காரணமுமின்றி முன் போலவே அதைத் திரும்பவும் பிடித்தல் கூடும்.

**ஒன்று மிகினு மொளிகவரா தேலுள்ளம்**
**என்று மகலா திருள்**

**பதவுரை :** உள்ளம் - ஆன்மாவானது, ஒன்று மிகினும் ஒளி கவராதேல் - மாயையினால் உண்டாகிய உடம்பு முதலியவை கிடைத்த காலத்திலும் அறிவைப் பெறமாட்டாதாயின், இருள் என்றும் அகலாது - ஆணவமயக்கம் ஒருகாலமும் அதைவிட்டு நீங்காது.

**விடிவா மளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து**

**பதவுரை :** மாயை வடிவு ஆதி - மாயையினாலாகிய தனு கரண புவன போகங்கள், கன்மத்து வந்து - ஆன்மாக்களுடைய புண்ணிய பாவங்களுக்குத் தக்கவையாகத் தோன்றி விடிவு ஆம் அளவும் விளக்கு அனைய - விடியும் வரையும் இருளை ஒருவாறு நீக்கத்தக்க விளக்குப்போல, ஆன்மா சிவஞானமாகிய பேரொளியைப் பெறும் முத்திநிலை வரையும் ஆணவ இருளை ஒருவாறு நீக்கத்தக்க அறிவைக் கொடுக்குங் கருவியாய் நிற்கின்றன.

## நான்காம் அதிகாரம் - அருளதுநிலை

**அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்**
**பொருளிற் றலையிலது போல்**

**பதவுரை :** அகிலத்து வேண்டும் பொருளின் - பூமியிலே (ஆன்மாக்கள் அவ்வவ் காலத்தில் இன்றியமையாததாக) விரும்பும் பொருளிலும், தலை இலது போல் -மேலான பொருள் இல்லாததுபோல அருளிற் பெரியது (இலது) திருவருளுக்கு மேலானதும் ஒப்பானதுமான பொருள் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருக்கம் நுகர்வினை பேரொளியா யெங்கும்**
**அருக்கனென நிற்கும் அருள்**

பதவுரை : அருக்கன் என - (உலத்திலுள்ள உயிர்த்தோற்றங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலியவைகளைக் கொடுத்தும் அவைகளை அனுபவிப்பித்தும் ஒளியைக் கொடுத்தும் நிக்குஞ்) சூரியனைப்போல, அருள்- திருவருளானது, பெருக்கமாய் - கர்மங்களை வளர்ப்பதாய், நுகர்வினையாய் - (அவைகளைத் தொலைத்தற்காக) இன்ப துன்பங்களை அனுபவிப்பதாய், பேரொளியாய் - (அந்த அனுபவத்தினால் ஆணவத்தின் வலியைக் குறைத்து ஆன்மாவின் ஞான சத்தியாகிய) ஒளியை மேலாக விளக்குவதாய்,எங்கும் நிற்கும் - எல்லா ஆன்மாக்களிடத்தும் நிற்கும்.

**ஊனறியா தென்று முயிரறியா தொன்றுமிது**
**தானறியா தாரறிவார் தான்**

பதவுரை : ஊன் என்றும் அறியாது - (அசேதனங்களாகிய தத்துவங்களாலாக்கப்பட்ட) உடல் ஒரு காலமும் ஒன்றையும் அறியமாட்டாது, உயிர் ஒன்றும் அறியாது - ஆன்மா (ஆணவத்தாற் பிணிக்கப்பட்டிருத்தலால்) ஒன்றையும் தானாக அறியமாட்டாது, இது தான் அறியாது - இத்திருவருளறிந்து சேர்த்தாலன்றி, ஆர் அறிவார் - அறிவைப் பெறக்கூடிய ஆன்மா எது? (ஒன்றுமில்லை யென்றபடி)

**பாலாழி மீனாளும் பான்மைத் தருளுயிர்கள்**
**மாலாழி யாழு மறித்து**

பதவுரை : உயிர்கள் - ஆன்மாக்கள், அருள் மறித்து - (தாம் வாழுதற்கிடமாகிய) அருளை (ப் பயன்படுத்திச் சிவானந்தத்தை அடைதலை) த் தவிர்த்து, மால் ஆழி ஆழும் - மயக்கத்தைக் கொடுக்கும் உலக விஷயமாகிய சமுத்திரத்தில் ஆழ்ந்து நிற்கும் (அடிப்படி நிற்றல்) பால் ஆழி மீன் - பாற்சமுத்திரத்தில் இருக்கும் மீன்கள், ஆளும் பான்மைத்து - அங்கே நிறைந்துள்ள பாலைப் பருகாமல் இழிவான பிராணிகளைத் தேடி புண்ணும் முறைமைபோலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுகு துணையறியா ஆற்றோனி லைந்தின்**
**உணர்வை யுணரா துயிர்**

**பதவுரை :** அனுகு துணை அறியா ஆற்றோனில் – தனக்குப் பின்னே சமீபத்திலே துணையாக வருபவனை அறியாத வழிப்போக்கனைப் போலவும், ஐந்தின் – தம்முடைய காட்சிக்குத் துணையாக நிற்கும் ஆன்மாவை அறியாத ஐம்பொறிகளைப் போலவும், உயிர் உணர்வை உணராது – ஆன்மா தனக்குத் துணையாக நிற்கும் ஞானமாகிய அருளை உணர்வதில்லை.

**தரையை யறியாது தாமே திரிவார்**
**புரையை யுணரா புவி**

**பதவுரை :** தரையை அறியாது – பூமியை (த் தமக்கு ஆதாரமென்று) உணராமல், தாமே திரிவார் புரையை – தாமே (தமக்கு ஆதாரமானாற்போலப்) போக்கு வரவு செய்பவருடைய அறிவீனம் போன்ற தமது அறிவீனத்தை, புவி உணரா – ஆன்மாக்கள் அறியமாட்டா, (ஏனெனில் அவைதாமே தமக்கு ஆதாரமென்றெண்ணுவது போல, இவை திருவருளைத் தமக்காதாரமென்றறியாமல் தாமே தமக்கு ஆதாரமென்று மயங்கும் அறிவீனத்தையுடையன)

**மலைகொடுத்தோர் மண்கொடுத்தோர் வான்கொடுத்தோர் ஞானத்**
**தலைகொடுத்தோர் தற்கேடர் தாம்**

**பதவுரை :** மலை கொடுத்தோர் – மலையின்மேல் நின்று கொண்டு மலையைத் தேடுபவரும், மண் கெடுத்தோர் – நிலத்திலே நின்று நிலத்தைத் தேடுவாரும், வான் கெடுத்தோர் – தாம் உலாவுமிடமாகிய ஆகாயத்தில் நின்று ஆகாயத்தைத் தேடுவாரும், ஞானந் தலைகெடுத்தோர் – ஞானமாகிய அருளிலே தங்கிநின்று அதைத் தேடுவாரும், தற்கேடர் தாம் – தம்மைக்காணாமல் தம்மைத் தேடும் அறிவிலிகளை ஒப்பர்

**வெள்ளத்துள் நாவற்றி யெங்கும் விடிந்திருளாம்**
**கள்ளத் திறைவர் கடன்**

**பதவுரை :** கள்ளத்து இறைவர் கடன் – (நிறைந்த அருளோடு கலந்து நின்றும் அதனால் வரும் பேரின்பத்தை அனுபவியாமல்) பொய் வழியில் தலைமை பெற்று நிற்கும் ஆன்மாக்களுடைய தன்மை, வெள்ளத்துள் நாவற்றி – நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நீரிலே செல்லும் போது பிற பொருளிலே நாட்டமுள்ளவன் அதைப் பருகாமல் நாவரண்டு செல்வதையும், எங்கும் விடிந்து இருளாம் – எவ்விடத்திலும் இருள் நீங்கி விடிந்த பின்பும் கண்ணைப் பயன்படுத்தாது தடுமாறி நிற்பதையும் போலும்.

**பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேற்பூனை**
**கரப்பருந்த நாடுங் கடன்**

**பதவுரை :** பரப்பு அமைந்து கேண்மின் – (ஞானநூல்களைக் கேட்கும்போது) பரபரப்பில்லாமல் நிறைந்த ஊக்கத்தோடு அவதானித்துக் கேளுங்கள் (அப்படியன்றி வேறு விஷயங்களில் மனத்தை விட்டால் மாறுபாடாக விளங்கித் துன்பத்தையடைவீர்கள்) இது – மனவொடுக்கமின்றிக் கேட்டல், பாற்கலன் மேற்பூனை – உறியிலுள்ள பாற்குடத்துக்கு மேலே நிற்கும் பூனையானது, கரப்பு அருந்த நாடும் கடன் – இறப்பிலோடுங் கரப்பைத் தின்னுதற்காகப் பாற்குடத்தில் நின்றும் பாய்ந்தோடும் தன்மைபோலாகும்.

**இற்றை வரையியைந்து மேதும் பழக்கமில்லா**
**வேற்றுயிர்க்கு வீடு மிகை**

**பதவுரை :** இற்றைவரை இயைந்தும் – இவ்வளவு காலமும் திருவருளோடு கலந்து நின்றும், ஏதும் பழக்கமில்லா அதைச் சற்றேனும் உணரமாட்டாத, வெறு உயிர்க்கு – அறிவில்லாத ஆன்மாவுக்கு, வீடு மிகை – வீடு பகையாகும்.

## ஐந்தாம் அதிகாரம் - அருளுரு நிலை

**அறியாமை யுண்ணின் றளித்ததே காணும்**
**குறியாகி நீங்காத கோ**

**பதவுரை :** அறியாமை உள்நின்று அளித்ததே – கண்ணாற் காணப்படாமல் ஆன்மாக்களில் நின்று (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கு தொழில்களையும் செய்து) இரட்சித்து வந்த அதுவே, காணும் குறிஆகி – (எஞ்சியதாகிய அருளலைச் செய்தற்காக) காணக் கூடிய குருவடிவை எடுத்து, நீங்காத கோ – உடனாய் நின்று ஆட்கொள்ளும் திருவருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்**
**சகத்தவருங் காண்பரோ தான்**

**பதவுரை :** அகத்து உறுநோய்க்கு - ஒருவீட்டிலிருப்பவனுக்கு வந்த பிணியை, உள்ளினரன்றி - அவ்வீட்டிலுள்ளவர் அறிவரேயன்றி, அதனை - அந்த நோயை, சகத்தவருங் காண்பரோ - தூரத்திலுள்ளவரும் அறிவாரோ? அறிய மாட்டார் (அதுபோல ஆன்மாவிலுள்ள மலமாகிய நோயை ஆன்மாவோடு கலந்து நிற்கும் அருளறிவதன்றி வேறொன்றும் அறிய மாட்டாது)

**அருளா வகையா லருள்புரிய வந்த**
**பொருளா ரறிவார் புவி.**

**பதவுரை :** அருளா வகையால் - (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கினையும்) மறைந்து நின்று செய்ததுபோல, அருள்புரி வந்த - மானுட வடிவத்தினாலே தன்னை மறைத்து) அருளல் என்னுந் தொழிலைச் செய்ய வந்த, பொருள் - குருவடிவத்தை, புவிஆர் அறிவார் - (பக்குவமுள்ள சிஷ்யனேயன்றிப்) பூமியில் வேறுயார் அறியத் தக்கவர்? வேறொருவரும் அறியார்)

**பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்**
**மெய்யிரண்டுங் காணார் மிக**

**பதவுரை :** பொய் - நிலையற்றதாகிய உலக இன்பத்திலே கருத்துடையராய், இருண்ட சிந்தை - ஆணவமலத்தால் மறைக்கப்பட்ட அறிவினையுடைய, பொறியிலார் - ஞானமாகிய ஒளியைப் பெறாதோர், போதமாம் மெய் இரண்டும் அறிவு மயமாகிய அருளையும் அவ்வருள் அதிட்டித்து நிற்குங்குரு வடிவத்தையும், காணார் மிக - சிறிதுமறியமாட்டார்.

**பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்**
**போர்வையெனக் காணார் புவி**

**பதவுரை :** பார்வை என - அவ்வவ்வினத்துப் பழக்கப்பட்ட விலங்குகளின் துணையைக் கொண்டு வன விலங்குகளைப் பிடிப்பதுபோல, மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம் - (மனித உருவமாகிய குருவடிவத்தைத் திருவருளெடுப்பது) மனிதரை நேர் நின்று வசப்படுத்தி ஆட்கொள்ளுதற்காம், புவி - பக்குவமில்லாதோர், போர்வை யெனக் காணார் - அது அருள் போர்த்துக்கொண்ட குருவடிவம் என்பதை அறியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமக்கெ னெவனுக் கெவைதெரியு மவ்வத்
தமக்கவனை வேண்டத் தவிர்**

**பதவுரை :** எமக்கு என் - (குருவினால்) எமக்கு என்ன பயன் (என்று கேட்டால்), எவனுங்கு எவை தெரியும் - எவனுக்கு ஞானநூற் பொருள்கள் உள்ளபடி தெரியுமோ, அவ் அத் தமக்கு அவனைக் குருவாக வேண்டி நிற்றலால், தவிர் - (குருவின் தேவையை) நீயுணர்வாய் ஆதால்ல "எமக்கென்" என்னுங் கேள்வியை) விடுவாயாக.

**விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்
கடனிலிருள் போவதிவன் கண்**

**பதவுரை :** விடம் - (ஒருவன் விஷம் தீண்டப்பெற்றால் அந்த) விடமானது, நகுலம் மேவினும் (மீளாது) - கீரிநேரே வந்து நிற்பினும் நீங்காது, பாவகனின் மீளும்- கீரியாகத் தன்னைப் பாவிக்கும் மாந்திரீகனால் நீங்கும், கடனில் - இந்தமுறைமை போல, (திருவருளானது நேரே நின்றும் மலங்களைப் போக்காது).

**அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்
சகலர்க்கு வந்தருளுந் தான்**

**பதவுரை :** அகலத்து அரும் அருளை ஆக்கும் - விஞ்ஞானகலரிற் பக்குமுடையாருக்குச் சிவபெருமான் அவர்களது அறிவிலே நின்று அருள் செய்து மலத்தை நீக்குவர், வினை நீக்கும் - பிரளயாகலரிற் பக்குவர்க்கு அவர்களைப் போல முன்னிலையாய் நின்று (ஆணவத்தோடு) கர்மத்தையும் நீக்குவர், சகலர்க்கு தான் வந்து அருளும் - சகலராற் பக்குவருக்குக் குருவடிவாய் வந்து மும்மலங்களையும் நீக்கியருளுவர்.

**ஆரறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்
பேரறிவான் வாராத பின்**

**பதவுரை :** எல்லாம் அகன்ற - மந்திரம் முதல் கலையீறாகிய அத்துவாக்களைக் கடந்த, நெறி அருளும் - வீட்டு நெறியை வெளிப்படுத்தியருளும், பேரறிவான் வாராத பின் - பேரறிவினராகிய சிவபெருமானே குருமூர்த்தங் கொண்டு வாராவிட்டால், ஆரறிவார் - (அவ்வீட்டு நெறியை) அறிவ வல்லார் யார்? (ஒருவருமிலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கலனல்**
**பானு வொழியப் படின்**

**பதவுரை :** பானு ஒழிய - ஒளி இல்லாமல், நற்கல் அனல் படின் - சூரியகாந்தக் கல்லில் அக்கினி தோன்றுமாயின் , இவன் ஒழிய - அருட்குருவின்றி, ஞானம் நண்ணிடும் - (ஆன்மாவில்) ஞானத்தோன்றும் (சூரியனொளி இல்லாமல் சூரியகாந்தக் கல்லில் அக்கினி தோன்றாதென்பது எப்படிப் பிரசித்தமான உண்மையாகுமோ, அப்படியே குரு இல்லாமல்ஆன்மாவில் தத்துவஞானம் தோன்றாதென்பதும் மறுக்க முடியாத உண்மையாம் என்றபடி)

## ஆறாம் அதிகாரம் - அறியுநெறி

**நீடு மிருவினைகள் நேராக நேராதல்**
**கூடுமிறை சக்தி கொளல்**

**பதவுரை :** நீடும் இருவினைகள் - வளர்ந்து வருவனவாகிய வினைகள் இரண்டும், நேர் ஆதல் - (விலக்கபட வேண்டிய முறையால்) ஒத்த தன்மைய என்ற எண்ணம் (நேர் - நிகர்) நேர் - ஆக (ஆன்மாவுக்கு) உண்டாக (நேர்பட), இறை சக்தி கொளல் கூடும் - சிவபெருமானுடைய திருவருட்சக்தி பதியும்

**ஏக னநேக னிருள்கரும மாயையிரண்**
**டாகவிவை யாறாதி யில்**

**பதவுரை :** ஏகன் - ஒருவராகிய கடவுளும் அநேகன் - அளவில்லாதவனாகிய ஆன்மாக்களும், இருள் - ஆணவமலமும், கருமம் - கர்மமலமும், மாயை இரண்டு - சுத்தம் அசுத்தமென்னும் இருவகை மாயைகளுமாகிய, ஆக இவை ஆறு ஆதி இல் - இந்த ஆறு பொருள்களும் அநாதியான பொருள்கள்

**செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனும் சேர்ப்பவனும்**
**உய்வா னுளனென் றுணர்**

**பதவுரை :** செய்வானும் - கருமங்களைச் செய்யும் புருடனும், செய்வினையும் - செய்யப்படும் நல்வினை தீவினைகளும், சேர்பயனும் - அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களும், சேர்ப்பவனும் - அவற்றை அனுபவிக்கபண்ணுங் கடவுளுடைய திருவருளும் ஆகிய இந்த நான்கையும், உய்வான் உளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று உணர் – (தன்னை) ஈடேற்றுதற்காகப் பொருந்துபவன் ஆன்மா என்று அறிவாயாக

**ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனொடுயிர்**
**தானுணர்வோ டொன்றாந் தரம்**

**பதவுரை :** ஊனொடு உயிர் – உடம்பொடு சேர்ந்த ஆன்மா, உணர்வோடு ஒன்றாம் தரம் – ஞானத்தோடு கூடி ஒன்றுபட்டு நிற்கும் தன்மை, ஊன் உயிரால் வாழும் ஒருமைத்து – உடம்பானது உயிரோடுகூடி வாழும் ஒற்றுமையைப் போல்வது.

**தன்னிறமும் பன்னிறமுந் தானாங்கற் றன்மைதரும்**
**பொன்னிறம்போன் மன்னிறமிப் பூ**

**பதவுரை :** பல் நிறமும் – (பளிங்கோடு சேர்ந்த பொருள்களின்) பலவகையான நிறங்களையும், கல தானாம் தன்மை – பளிங்கினுடைய இயல்பான நிறத்தையும், தன்னிறமும் – தன்னுடைய பிரகாசத்தையும், தரும் – தருவதாகிய பொன்னிறம் போல் – பொலிவாகிய சூரியகிரணம் போல, மன் நிறம் – (மலங்களை முதிர்விக்கும் திரோதானசத்தியின் பிரகாசத்ததையும் மலங்கள் நீங்கிய பின்பு ஆன்மாவை விளக்குஞ் சிற்சத்திப் பிரகாசத்தையுந் தந்து இவற்றுக்கப்பால் தன்னுடைய பிரகாசத்தோடு நிற்பதுமான) கடவுளுடைய திருவருளாகிய சோதியை உடையது. இப்பூ – இந்தப் பூமியானது

**கண்டொல்லை காணுநெறி கண்ணுயிர் நாப்பணொளி**
**யுண்டில்லை யல்லா தொளி**

**பதவுரை :** கண் உயிர் நாப்பண் உண்டு – (ஒளியுடைய) கண்ணானது (பொருளுக்கும் ஆன்மாவுக்கும்) நடுவே உள்ளது. (அது), கண்டு – (ஒருபொருளை) உற்றுப்பார்த்து, ஒல்லை காணும் நெறி – அதை விரைவில் உணருதற்கு வழியாகின்றது. (அதுபோல), ஒளி உயிர் நாப்பண் உண்டு – ஞான ஒளியானது உயிருக்கும் (மெய்ப்பொருளுக்கும்) நடுவில் உள்ளது. (அது) கண்டு – மெய்ப்பொருளைக் கண்டு, ஒல்லைகாணும் நெறி – அதை விரைவில் உணருதற்கு வழியாம், ஒளி அல்லாது இல்லை 07 திருவருளாகிய ஞான ஒளி இல்லையாயின் மெய்பொருளைக் காணுதலில்லையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புன்செயலி னோடும் புலன்செயல்போ னின்செயலை**
**மன்செயல தாக மதி**

**பதவுரை :** புன்செயலின் ஒடும் புலன் செயல்போல் – இழிவான செய்கைகளிலே செல்லும் இந்திரியங்களின் செய்கைகளை உன்னுடைய செய்கைகளாக நீ கருதியதுபோல், நின் செயலை – உன்னுடைய செயலை, மன் செயல் ஆக மதி – கடவுளுடைய கிரியாசத்தியின் வழியே நடப்பதாக எண்ணிக்கொள்

**ஓராதே யொன்றையுமுற் றுன்னாதே நீமுந்திப்**
**பாராதே பார்த்ததனைப் பார்**

**பதவுரை :** ஒன்றையும் ஓராதே – ஞானம் எப்படியிருக்கும், எவ்வாறு வரும் என்று நீ ஆராயாதே, உற்று உன்னாதே – (உலகப் பொருள்களைக் குறித்து நினைப்பது போல) அதைப்பற்றிச் சற்றேனும் நினையாதே, நீ முந்திப் பாராதே – அது வருமுன் நீ அதைத் தெளிந்து கொள்ள முயற்சி செய்யாதே, பார்த்தனைப் பார் –ஞானமானது உனக்குத் தோன்றும் அப்போது அதைக் காண்பாயாக. (பார்த்த + அதனை – தரிசனப்பட்ட அதனை)

**களியே மிகுபுல னாக்கருதி ஞான**
**வொளியே யொளியா வொளி**

**பதவுரை :** களியே மிகுபுலன் ஆ(க) கருதி – ஞானத்தைப் பெற்றபின் உண்டாகும்) பேரானந்தத்தையே நீ நுகரும் பொருளாகக் கொண்டு ஞானஒளியே – ஞானமாகிய பிரகாசத்தையே ஒளி ஆ(க) – அறிகருவியாகக் கொண்டு ஒளி – (அந்த இன்பத்துள் மூழ்கி உலக விடயங்கள் உன்னைப் பற்றாதபடி) ஒளித்து நிற்பாயாக.

**கண்டபடி யேகண்டு காணாமை காணாமை**
**கொண்டபடி யேகொண் டிரு**

**பதவுரை :** கண்டபடியே கண்டு – ஞானம் உனக்கு எப்படி வெளிப்பட்டதோ அப்படியே நீ அதைக் கண்டு, காணாமை காணாமை – அறியாமை (உலக விடயக்கருத்து) வந்து தோன்றாதபடிக்கு, கொண்டபடியே கொண்டிரு – அது உன்னை ஏற்றபடி அதன்வயப்பட்டு இருப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிது போற்
றானதுவாய் நிற்கும் தரம்**

**பதவுரை :** தூ நிழல் ஆர்தற்கு – (வெயிலில் வருந்தினவன்) குளிர்ந்த நிழலைச் சேர்தற்கு, ஆரும் சொல்லார் – அங்கே போ என்று ஒருவருஞ் சொல்லவேண்டுவதில்லை (அவன் தானே விரைவாக ஓடிச் சேருவான்), தொகும் இது போல் (ஆகும்) – பொருந்திய இந்த முறைமை போலும், தான் அதுவாய் நிற்குந் தரம் மலங்களின் துன்பங்களால் வருந்தினோன் அருளைக் கண்டவுடனே தான் அந்த அருளோடு சேர்ந்து நிற்குந் தன்மை

**தித்திக்கும் பாறானுங் கைக்குந் திருந்திடுநாப்
பித்தத்தின் றான்றவிர்ந்த பின்**

**பதவுரை :** தித்திக்கும் பால்தானும் கைக்கும் – (பித்தநோயுடையாரது நாவுக்கு) மதுரமான பாலும் கசப்பாயிருக்கும் பித்தின் தவிர்த்தபின் – பித்த நோயினின்றும் நீங்கியபின், நா – நாவானது , திருந்திடும் – கைத்த பால் தித்திக்கத்தக்கதாகத் திருந்திவிடும்.

**காண்பா னொளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட
வீண்பாவ மெந்நாள் விழும்**

**பதவுரை :** ஒளி – ஒளிவடிவாகிய ஞானமானது, இருளிற் காட்டிடவும் – ஆணவமாகிய இருளில் ஆன்மா கிடந்து மயங்கும் போது தன்னைக் காட்டிடவும், காண்பான் – அதைக் காணும் ஆன்மா, தான் கண்டவீண்பாவம் – தன் முயற்சியால் அதைக் கண்டதாக நினைப்பதால் வீணாக வரும் பாவமானது, எந்நாள் விழும் – எப்போது நீங்கும்.

**ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்**

**பதவுரை :** ஒளியும் இருளும் ஒருமைத்து – திருவருளும் ஆணவமும் தன்வகைப் பொருளைக் காட்டி ஒழிந்ததை மறைக்குந் தன்மையில் ஒத்திருக்கின்றன. பன்மை – அவற்றிற்குள்ள பேதம் யாதெனில், தெளிவு – அருளானது தன்னை அடைந்தோர்க்கு உண்மைப்பொருளைக் காட்டுவதும், தெளியார்செயல் – ஆணவமானது அது நீங்காதார்க்குப் பொய்யாகிய பொருள்களைக் காட்டுதலுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க் கல்லால்**
**எடுத்துச் சுமப்பானை இன்று**

**பதவுரை :** நல் கேண்மையார்க்கு அல்லால் – அன்பு நிறைந்த சுற்றத்தவரை உடையவருக் கல்லாமல், எடுத்துச் சுமப்பானை– அவருடைய சுமை எல்லாவற்றையும் எடுத்துச் சுமப்பவன் ஒருவனை, இன்று கிடைக்கத் தகுமோ – இப்போது பெற்றுக்கொள்ளுதல் கூடுமோ, கூடாது (அதுபோல) பேரன்பால் திருவருளைச் சார்ந்தவருக்கு அவருடைய வினைகளையும் வினைப்பயன்களையும் சுமப்பவராகிய கடவுள் எளிதிற் தோன்றுவர்.

**வஞ்ச முடனோருவன் வைத்த நிதிகவரத்**
**துஞ்சினனோ போயினனோ சொல்**

**பதவுரை :** ஒருவன் வைத்த நிதி – ஒருவன் வைத்த பொருளை, வஞ்சமுடன் கவர – வேறொருவன் களவாக எடுத்துக் கொண்டுபோக, துஞ்சினானோ போயினானோ – அந்தப் பொருளையுடையவன் உறங்கினானோ அல்லது அவ்விடம் விட்டு நீங்கினானோ, சொல் – சொல்லுவாயாக.

**தனக்குநிழ லின்றா வொளிகவருந் தம்பம்**
**எனக்கவர நில்லா திருள்**

**பதவுரை :** தனக்கு நிழல் இன்றா (க) – (சூரியன் உச்சியில் நிற்கும் போது) தன்னுடைய நிறந் தோன்றப் பெறாமல், ஒளி கவருந் தம்பம் என – சூரிய கிரணத்தாற் கவர்ந்து கொள்ளப்படும் படிகத்தூண்போல, கவர – (ஆன்மா தன்னறிவு பெறாமல் திருவருளாற்) கவர்ந்து கொள்ளப்படுமாயின், இருள் நில்லாது – அந்நிலையிலே மலம் நில்லாமல் போகும்.

**உற்கைதரும் பொற்கை யுடையவர்போ லுண்மைப்பின்**
**நிற்க அருளார் நிலை**

**பதவுரை :** உற்கைதரும் பொற்கை உடையவர் போல் – தழற் கொள்ளியை (சூளை) ப் பிடித்திருக்கும் அழகிய கையையுடையவர் (தாம் வேண்டிய பொருளைக் காணும் போது அக் கொள்ளியை முன்னிட்டுத் தாம் பின்னே நிற்பது) போல, உண்மைப் பின் நிற்க – (ஒருவர் சிவத்தைக் காணவேண்டின்) அருளைத் தமக்கு முன்னாக்கித் தாம் அதன்பின்னே நிற்பாராக, அருள் ஆர்நிலை – அருளோடு பொருந்தி நிற்கும் நிலை இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐம்புலனாற் றாங்கண் டகன்றா லதுவொழிய**
**ஐம்புலனார் தாமா ரதற்கு.**

பதவுரை : (சிவம்) ஐம்புலனால் - மெய் வாய் கண் மூக்குச் செவிகளால், தாம் கண்டன்றால் - தாம் கண்ட பொருள்களுக்கு அப்பாற்பட்ட பொருளாயின். அது ஒழிய - அருளாலேயன்றி, அதற்கு பேரின்பமாகிய சிவத்தை யறிதற்கு, ஐம்புலன் ஆர் தாம் ஆர் - ஐம்பொறிகளுக்கேனும் தமக்கேனும் தகுதியில்லை.

**தாமே தருமவரைத் தம்வலியி னாற்கருதல்**
**ஆமே யிவனா ரதற்று**

பதவுரை : தாமே தரும் அவரை - ஒரு பொருளை ஒருவர்க்குத் தாமே விரும்பித் தருபவரை (மதியாது), தம்வலியினாற் கருதல் ஆமே - தம் சாமார்த்தியத்தினால் அவரிடம் அதைப் பெற்றதாக நினைத்தல் நீதியாகுமா? ஆகாது (அதுபோல, திருவருளானது தானாக விரும்பி ஆன்மாவுக்குப் பேரின்பத்தைக் கொடுக்க, ஆன்மா தன்னுடைய ஆற்றலால் அதைப் பெற்றதென்று நினைத்தலாகாது), இவன் அதற்கு ஆர் (திருவருளன்றி) அப்பேரின்பத்தைப் பெறத்தக்க தகுதி ஆன்மாவுக்குச் சிறிதுமில்லையே.

## எட்டாம் அதிகாரம் - இன்புறுநிலை

**இன்புறுவார் துன்பா ரிருளி னெழுஞ்சுடரின்**
**பின்புகுவார் முன்புகுவார் பின்**

பதவுரை : இருளின் எழும் - ஆணவமலத்தை நீக்குவதற்காக மேலாக விளங்குகின்ற, சுடரின் பின்புகுவார் - ஞானத்தை முன்னிட்டுத் தாம் பின்னே செல்பவர், இன்புறுவார் பேரின்பத்தை அடைவார், முன்புகுவார் பின்துன்பார் - தாம் முன்னாகவும் அவ்வருள் பின்னாகவுஞ் செல்பவர் (அதனால் பின் துன்பத்தை அடைவார்)

**இருவர் மடந்தையருக் கென்பயனின் புண்டாம்**
**ஒருவ னொருத்தி யுறின்**

பதவுரை : இருவர் மடந்தையருக்கு என் பயன் - ஆளப்படும் இயல்புடையவளாகிய ஒரு பெண் வேறொரு பெண்ணால் இரட்சிக்கப்படமாட்டாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அதுபோல, ஆளப்படுவதாகிய ஆன்மா சிவத்தால் ஆளப்படுவதாகிய அருளோடு சேர்வதனாற் பேரின்பமாகிய பயனை அடையமாட்டாது) ஒருத்தி ஒருவன் உறின் இன்பு உண்டாம் - பெண்ணாணவள் ஆளுந்தன்மையையுடைய ஆடவனை அடைந்தால் அவனால் (இரட்சிக்கப்படுதலாகிய) இன்பத்தை அடைவாள் (அதேபோல ஆன்மா அருளைக் கொண்டு சிவமாகிய தன்னுடைய தலைவனைச் சேர்ந்தே பேரின்பத்தை அடையும்)

**இன்பத்தை யெய்துவார்க் கீயு மவர்க்குருவம்**
**இன்பகன மாதலினா லில்**

**பதவுரை :** எய்துவார்க்கு இன்பதனை ஈயும் - (சிவ பெருமான் தம்மை) அடையும் ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தைக் கொடுத்தருளுவர், அவர்க்கு உருவம் இன்பகனம் - அவருடைய திருமேனி நிறைந்த ஆனந்தமாம், ஆதலினால் இல் - ஆதலினால் (அத்துவிதமான ஆன்மாவினால் அவர் ஆனந்தத்தைப் பெறுவது) இல்லை

**தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்**
**கூடலைநீ யோகமெனக் கொள்**

**பதவுரை :** தாடலைப்போல் - தான் தலை என்னும் இரண்டு சொற்களும் தாடலை என்னும் ஒரு சொல்லானது போல, கூடியவை - சிவமும் ஆன்மாவுஞ் சேருவன, வேறு நிகழா - பிரிக்கப்படாத, இன்பக் கூடலை - பேரின்பமாகிய அந்தக் கலப்பை, ஏகமென நீ கொள் - அத்துவிதமென்று நீ அறிந்துகொள்.

**ஒன்றாலு மொன்றா திரண்டாலு மோசையெழாது**
**என்றால்ஒன் றன்றிரண்டும் இல்**

**பதவுரை :** ஒன்றாலும் ஒன்றாது - கடவுளும் ஆன்மாவும் ஒரே பொருளாயின் அவை கூடவேண்டுவதில்லை, இரண்டாலும் ஓசை எழாது என்றால் - அவை வேறாக நிற்பின் பேரின்ப முண்டாகாது ஆதலால், ஒன்று அன்று இரண்டும் இல் - அவை ஒரு பொருளுமல்ல இரு பொருளுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்றாரும் பெற்றாரும் மோவா துரையொழியப்**
**பற்றாரு மற்றார் பவம்**

**பதவுரை :** உற்றாரும் - பரமுத்தியை யடைந்தோரும், பெற்றாரும் - அப் பரமுத்தியைப் பெறுவதற்குக் காரணமாகிய சமாதியை அடைந்தோரும், ஓவாது உரை யொழியப் பற்றாரும் - இடையறாத மௌன சமாதியையடையாமல் (கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும்) ஞான நிலைகளையடைந்தோரும், பவம் அற்றார் - பிறவிப் பிணியற்றவராவார்.

**பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே**
**நீயொன்றுஞ் செய்யாம னில்**

**பதவுரை :** பேய் ஒன்றுந் தன்மை பிறக்குமளவும் - பேய் பிடித்தவனுடைய தன்மை போன்ற நிலைமை உனக்குண்டாகும் வரையும், நீ ஒன்றுஞ் செய்யாமல் நில் - ஒன்றுஞ் செய்யாமல் அசைவற நிற்பாயாக.

**ஒண்பொருட்க ணுற்றார்க் குறுபயனே யல்லாது**
**கண்படுப்போர் கைப்பொருள்போற் காண்**

**பதவுரை :** ஒண் பொருட்கண் உற்றார்க்கு - மெய்ப்பொருளாகிய ஞானத்தை அடைந்தவர்களுக்கு , உறுபயனே - (அவர்கள் அநுட்டித்துவரும் சரியை கிரியை யோகங்களால் உண்டாகும் பயன்) பேரின்பமேயாம், அல்லாது - அன்றியும், கண்படுப்போர் கைப்பொருள் போற் காண் - உறங்குபவரது கையிலிருக்கும் பொருள் தானே நழுவுவதுபோல, அந்தச் சமயாசாரங்கள் தாமாகவே அவர்களின்று நழுவுவதுமுண்டு.

**மூன்றாய தன்மையவர் தம்மின் மிகமுயங்கித்**
**தோன்றாத இன்பமதென் சொல்**

**பதவுரை :** அவர் தம்மின் மிக முயங்கி - (முத்தியின்பமானது) சிவமும் ஆன்மாவுஞ் சிறிதும் பரிவின்றி ஒன்றாய் நிற்குங் கலப்பினால், மூன்றாய தன்மை - காண்பவன் காட்சி காட்சிப்பொருள் என்னும் மூவகைப்பட்ட தன்மையும், தோன்றாத இன்பம் - வெவ்வேறாகத் தோன்றாத பேரின்பமாம் அது அந்த இன்பத்தின் அதிசயத்தை, சொல் என் - சொல்லுவதெப்படி (சொல்லுந்தரத்தன்று என்றபடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்பி லினிதென்ற லின்புண்டே லின்றுண்டாம்**
**அன்பு நிலையே யது**

**பதவுரை :** இன்பியல் இனிதென்றல் - எல்லா இன்பங்களிலும் இனிதென்று சொல்லப்படுவதாகிய முத்தியின்பமானது, இன்பு உண்டேல் ஒருவர்க்குப் பேரன்பு உளதாயின் இன்று உண்டாம் - இப்பொழுதே பெறப்படும், அது அன்புநிலையே - அது அன்பையே தனக்கு நிலையாக உடையதாதலால்.

## ஒன்பதாம் அதிகாரம் - ஐந்தெழுத்தருணிலை

**அருணூலு மாரணமு மல்லாதும் ஐந்தின்**
**பொருணூல் தெரியப் புகும்**

**பதவுரை :** அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் - சைவாகமங்களும் வேதங்களும் உபாகமம் முதலிய மற்றைய ஞானநூல்களும், ஐந்தின் பொருள் நூல் - ஐந்தெழுத்தின் பொருளை உணர்த்தும் நூல்களாம், தெரியப்புகும் - இவ்வைந்தெழுத்தை ஆராயின் அவை அதில் அடங்குதல் புலப்படும்.

**இறைசத்தி பாச மெழின்மாயை யாவி**
**உறநிற்கு மோங்காரத் துள்**

**பதவுரை :** இறை - சிவமும், சத்தி - திருவருளும், பாசம் - மலமும், எழில் மாயை - (ஆன்மாவாகிய சிற்சத்தியை இறுதியிற் பூரணமாக விளக்கும்) சிற்பபினையுடைய திரோதானச் சத்தியும், ஆவி - ஆன்மாவும், ஓங்காரத்துள் உற நிற்கும் - பிரணவத்தினுள்ளே பொருந்தி நிற்கும்.

**ஊன நடன மொருபா லொருபாலாம்**
**ஞானநடனந் தானடுவே நாடு**

**பதவுரை :** ஊன நடனம் ஒருபால் - பிறப்பினை விளைக்கும் திரோதனமும் மலமும் ஒரு பக்கத்திலுள்ள, ஞான நடம் ஒருபால் ஆம் - மோட்சத்தை யுதவும் சிவமும் சகத்தியும் ஒரு பக்கத்திலுள்ளன. தான் நடுவே - ஆன்மாவாகிய தான் நடுவிலுள்ளது, நாடு - (இவைஐந்தெழுத்திலிருப்பதைக் ) காண்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரியமந மேவியவ்வை மீளவிடா சித்தம்**
**பெரியவினை தீரப் பெறும்**

**பதவுரை :** ந மேவி ம விரிய – திரோதானசத்தி மலத்தைச் சாரா மலம் முயற்சிசெய்ய, யவ்வை மீளவிடா – ஆன்மாவை (அவை பிறவிகளில்) அழுத்தும், (இது பெத்தநிலை), தம் பெரிய வினை தீர – (ஆன்மாக்கள்) தம்முடைய பெரிய பிணிகளாகிய மலங்கள் தீர சி பெறும் – (திருவருட் சத்தியின் முயற்சியால்) சிவத்தை யடையும் (இது முத்திநிலை)

**மாலார் திரோத மலமுதலா மாறுமோ**
**மேலாசு மீளா விடின்**

**பதவுரை :** மாலார் திரோதம் மலம் முதலா – பிறவிப் பிணியிலே விடுவனவாகிய திரோதனத்தையும் மலத்தையும் முதலாக வைத்து ஐந்தெத்தை ஓதினால், மாறுமோ –மலம் நீங்குமோ, நீங்காது, மேல் – மேலான பொருளாகிய சிவம், ஆசு மீளாவிடின் – ஊன நடனத்தைச் செய்விப்பவைகளின் இடத்தை எடுத்துக் கொண்டு அவைகளைக் கீழாக்காவிட்டால்

**ஆராதி ஆதார மந்தோ வதுமீண்டு**
**பாராது மேலோதும் பற்று**

**பதவுரை :** ஆதாரம் ஆராதி – உனக்கு ஆதாரமா யிருக்கின்ற சிவத்தை முன்னதாக வைத்து ஐந்தெழுத்தை ஓதி வழிபடு, அது மீண்டு பாராது – (உபாய மார்க்கத்தில் ஓதிய) நகராதி பஞ்சாத்திரத்தின் இயல்பைத் திரும்ப விசாரியாமல் மேல் ஓதும் பற்று (உண்மை மார்க்கத்தில் நிற்கும் போது) நகார மகாரங்களை முன்னதாக ஓதுந் தன்மை அந்தோ – கவலைப்பட வேண்டிய தொன்று.

**சிவ முதலே யாமா சேருமேற் றீரும்**
**பவமிதுநீ யோதும் படி.**

பதவுரை : சிவ முதலே ஆமாறு செருமேல் – சிகாரம் வகாரம் என்னுமிரண்டும் முதலிலே வரும்படி உச்சரித்தல் கூடுமாயின் பாவம் தீரும் பிறவிக்குத் காரணமாகிய மலங்கள் நீங்கும் நீ ஓதும்படி இது – முத்தியை விரும்பிய நீ உச்சரிக்கும் முறைமை இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே**
**ஆசி லுருவமுமா மங்கு.**

பதவுரை : வாசியருளி - சத்தியானது சிவத்தைக்காட்டி, அதை - ஆன்மாவை சித்தியிற் குற்றமற்ற மேனியாயிருக்கும். வாழ்விக்கும் வீட்டின்பத்தில் இருத்தும், அதுவே அங்கு, ஆசுஇல் உருவமும் ஆம் - அந்தத் திருவருளே ஆன்மாவுக்கு.

**ஆசினவா நாப்ப ணடையா தருளினால்**
**வாசியடை நிற்கை வழக்கு**

பதவுரை : ஆசு இல் ந வா நாப்பன் - (முத்திநிலை யடைந்த ஆன்மாவானது) குற்றமற்றதாகிய திரோதானத்துக்குஞ் சிற்சத்திற்கும் நடுவில் அடையாது - (பெத்தான்மாவைப் போல) நில்லாது, அருளினால் - திருவருளினால் வாசி இடை நிற்கை வழக்கு - சிற்சத்திக்குஞ் சிவத்துக்கும் இடையில் நிற்பது முறைமையாம்.

**எல்லா வகையு மியம்பு மிவனகன்று**
**நில்லா வகையை நினைந்து**

பதவுரை : இவன் அகன்று நில்லா வகையை நினைந்து - ஆன்மாவானது சிவசத்தியினின்றும் ஒரு காலமும் நீங்காமல் அதனோடு கூடுதற்கு ஏதுவாயிருக்குந் தன்மையைக் கருதியே, எல்லா வகையும் இயம்பும் - ஆன்மா முத்தியடைவதற்கு உரிய அச்சாதன வழிகள் எல்லாவற்றையும் வேதாகமங்கள் சொல்லும்

## பத்தாம் அதிகாரம் - அணைந்தோர் தன்மை

**ஓங்குணர்வி லுள்ளடங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்**
**தூங்குவர்மற் றேதுண்டு சொல்.**

பதவுரை : ஓங்கு உணர்வினுள் அடக்கி - சீவன் முத்தர் நிறைந்த ஞானத்தினுள்ளே அடங்கி, உள்ளத்துள் இன்பு ஒடுங்க - மறவினுள்ளே பேரின்பம் நிறைந்தால் தூங்குவர் அவருக்கு வேறு என்ன காரியம் உண்டு, சொல்வாயாக (ஒன்றுமில்லை என்றபடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐந்தொழிலுங் காரணர் ளாந்தொழிலும் போகநுகர்**
**வெந்தொழிலு மேவார் மிக.**

பதவுரை : ஐந்தொழிலும் - சிவத்தினாற் செய்யப்படும் ஐந்தொழில்களையேனும் காரணர்களாந் தொழும் - திருவருளாற் பிரேரிக்கப்பட்டு நடைபெறுந் தனித்தொழில் களையேனும் போகநுகர் வெந்தொழிலும் - மாயாபோகத்தை அனுபவிக்கும் வெய்ய விடைகளையேனும் மிக மேவார் சிறிதும் பொருந்தார்.

**எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரொன்**
**றல்லா தறியா ரற**

பதவுரை : எல்லாம் அறியும் அறிவு உறினும் - எல்லாவற்றையும் அறியும் ஞானத்திற் கலந்து நிற்பினும் இங்கு இவ்விடத்து இவர் சீவன் முத்தர் ஒன்று அல்லாது சிவமொன்றையே யன்றி மற்றொன்றையும், அற அறியார் - சிறிதுங்கானார்.

**புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்**
**தலநடக்கு மாமை தக.**

பதவுரை : தலம் நடக்கும் ஆமை தக - தன்வழிச் செல்லும் ஆமை (யானது ஆரவாரமுள்ள இடத்தில் தன்னுடைய ஐந்துறுப்புக்களையும் உள்ளுக்கு இழுத்து அசைவில்லாமற் கிடப்பது) போல புலன் அடக்கி - (சீவன் முத்தர் தமது பொறிகளையும் மனத்தையும்) விடயங்களிற் செல்லாமல் உளமுகமாகும் படி அடக்கி தம்முதற் கட்புக்குறுவர் - தமது முதலாகிய சிவத்திலே புகுந்து பொருந்தி நிற்பர், போதார் - (வெளியே விடயங்களிற் பொறிகளைப்) போகவிடார்.

**அவனையகன் றெங்கின்றா மாங்கவனா மெங்கு**
**மிவனையொழிந் துண்டாத வில்**

பதவுரை : அவனை அகன்று - சிவத்தை நீங்கி, எங்கு இன்றாம் - எவ்வுலகுமில்லை, ஆங்கு - அதுபோல அவனாம் இவனை ஒழிந்து - சிவமாதலை யடைந்த முத்தனை நீங்கி, எங்கும் உண்டாதல் இல் - எவ்விடமும் உளதாய் நிற்றல் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்
கெள்ளுந் திறமேது மில்.**

பதவுரை : உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக்காட்சி யருக்கு – உள்ளும் வெளியும் ஒரு தன்மைத் தாய்க்காணும் ஞானத்தை அடைந்த சீவன் முத்தருக்கு, எள்ளும் பதில் திறம் ஏதும் இல் – ஒன்றையும் இகழுந் தன்மையில்லை.

**உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.**

பதவுரை : உறுந் தொழிற்குத் தக்க பயன் – யான் எனது என்னுஞ் செருக்கோடு செய்யப்பட்ட வினைக்குத் தகுந்த பலன், உலகம் – உலக வாழ்க்கைகளாம். தத்தம் வறுந்தொழிற்குப் பயன் – அந்தச் செருக்கு நீங்கிய தொழிலுக்குரிய பலன், வாய்மை – மெய்ப்பொருளாகிய முத்தியின்பம்.

**ஏன்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை
தோன்றி லருளே சுடும்.**

பதவுரை : ஏற்றவினை – பிராரத்தமானது, உடலோடு ஏகும் – தேகம் நீங்கும்போது நீங்கும் இவ்வுடலால் நுகரப் பட்டுத் தொலையும் என்ற படி, இடையேறும் வினைத்தோன்றில் – முக்திக்கும் (ஆணவமல நீக்கத்துக்கும்) தேகத்தின் முடிவுக்குமிடையில் வினை செய்யும் படி அருளே சுடும் – அவ் வினையைத் திருவருளே நீக்கும்.

**மும்மை தரும்வினைகண் மூளாவா மூதறிவார்க்
கம்மையு மிம்மையே யாம்.**

பதவுரை : மும்மை தரும் வினைகள் மூளாவாம் – இம்மை மறுமை அம்மை என்னும் மூவகைப் பயனையுந் தருகின்ற வினைகள் ஒன்றும் அவரைத் தாக்கமாட்டா, மூதறிவார்க்கு, (ஆதலால் ஆணவமலம் நீங்கிப்) பேரறிவைப் பெற்ற முத்தருக்கு அம்மையும்மிம்மையே ஆம் – பரமமுக்தியும் சாரீரம் இருக்கையிலே யுண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கள்ளத் தலைவர் துயர்கருதிக் தங்கருணை**
**வெள்ளத் தலைவர் மிக.**

பதவுரை : கள்ளத் தலைவர் துயர் கருதி - ஆணவத்தால் வரும் பொய்யறிவு நிறைந்த பெத்தான்மாக்கள் படுந் துன்பத்தை எண்ணி, தம் கருணை வெள்ளத்து - (சீவன் முத்தர்) தம்மிடத்திலுள்ள இரக்கமாகிய கடலில் மிக அலைவர் மிகவும் அலைதலைச் செய்வர்.

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்பையும், பண்பையும் அணிகலனாகக் கொண்டு அரவணைத்து கல்வியறிவூட்டி எம்மைக் காத்து வளர்த்த எங்கள் குடும்பத்தலைவி அமரர் திருமதி தங்கரெத்தினம் இராசரெத்தினம் இறைபதம் எய்திய செய்தியறிந்து நேரிலும், செய்திகள் மூலமாகவும், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையம் சாத்தி அஞ்சலி செய்தோருக்கும் இறுதிச் சடங்கில் பங்கு கொண்டு பல வழிகளிலும் உதவியோருக்கும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்கு பற்றி ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும், மலராக்கத்திற்கு உறுதுணை நின்றவர்களுக்கும் எமது நன்றிகள்

குடும்பத்தினர்

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org